தமிழர் பொருணமியம்
வாரமலர்
TAMILS ECONOMY

விலை - 100/=
இதழ் - 78
06.10.2024

# யாழ்ப்பாண பப்பாசியை யார் காண்பது இனி?






மன்னர்கள் காலத்தில் குளங்கள் பெற்றிருந்த முக்கியத்துவம் 08





உத்தரவாதங்கள் ,ல்லாத கடன்கள் ,ளைஞர்களுக்கான வாய்ப்புக்கள் 10

கை கொடுக்கும் கைத்தொழில் 16


# அதிகரிக்கும் குழந்தை வறுமை: சமூக பொருளாதார அமைப்புக்களின் வகி பாகம்

வை. ஜெயமுருகன்,
ஆய்வாளர், ஆய்வு நிறுவனம், யாழ்ப்பாணம்

பொருளாதார நெருக்கடியின் உடனடி விளைவு வறுமையின் நிலை அதிகரித்து செல்வதே. இலங்கையில் தற்போதைய கணக்கீட்டின் பிரகாரம் 70 இலட்சம் பேர்கள் வறுமையின் பிடியில் தவிர்க்கின்றனர். உலக வங்கியின் தரவுகளின் படி அதிகரித்தது செல்லும் குழந்தை வறுமை ஒரு பாரிய சமூக பொருளாதார பிரச்சனையாக மாறிவருகிறது. இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் அளவை மதிப்பிடுகையில் அதிகரித்தது செல்லும் குழந்தை வறுமை ஒரு மிகப்பொருத்தமான நேர் சுட்டியாகும். பொருளாதார நெருக்கடியில் அரசின் வகி பாகம் தலையாய கடமை எனக்கருகினாலும் சமூக அமைப்புக்களின் வகி பாகம் அரசின் கட்டமைப்புக்கு மேலாக கோரவேண்டிய நிலையில் தற்போதைய நெருக்கடி எம்மை கடந்து செல்கிறது.

இலங்கை சனத்தொகையில் கிட்டத்தட்ட கால் பகுதியினர் வறுமைக் கோட்டின் பிடியில் தான் சீவியம். குறிப்பாக, யுத்த விளைவித்த பொருளாதார நிலைமை பல தசாப்தகால ஆயுத மோதலின் மாறாத விளைவு ஆகும். தங்குமிடம் அல்லது உணவு இன்றி தவிக்கும் குடும்பங்களின் பொருளாதாரத்தை யுத்தம் கடுமையாகப் பாதித்துள்ளது. நிலைமை கொஞ்சம் கொஞ்சமாக மேம்பட்டு வந்தாலும், பல குடும்பங்களின் வாழ்க்கை கடினமாக உள்ளது. குழந்தைகள் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்கள் மற்றும் அவர்களின் பல உரிமைகள் மோசமான பொருளாதார சூழ்நிலைகளால் மறுக்கப்படுகிறது. தற்போதைய பொருளாதார நெருக்கடி மேலும் பாதிக்கப்பட்டு வருபவர்களின் நிலைமையை மிகவும் ஆழத்துக்கு இழுத்துள்ளது மீண்டும் எழும்பிவரமுடியாதபடி. தெளிவாக சொல்வதானால் கிட்டத்தட்ட 50 மூ முழு இலங்கையிலும் அதைவிட மேலும் அதிகமாக வடக்கு கிழக்கு மற்றும் மலையக வாழ்விடங்களிலும் வறுமையின் நிலை ஒரு சமூக நெருக்கடிக்கு மாறியுள்ளது. குழந்தைகள் நிலை அதைவிட அதிகம் நெருக்கடி உச்சநிலை. அரசின் பலம் கூட வறுமை நிலைதான். இந்நிலையில் சமூக அமைப்புக்களின் வகி பாகம் ஏன் மிக முக்கியம் என்பதை உணரும் தரும் இதுவாகும்.

இலங்கையில் ஊட்டச்சத்து குறைபாடு 24மூ - 74மூ வரை உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இலங்கை குறைந்த




Source: LIRNEasia (2023)

நடுத்தர வருமானம் கொண்ட நாடு. சமீபத்திய பொருளாதார மற்றும் உணவு நெருக்கடியுடன், நாட்டின் ஊட்டச்சத்து குறைபாடு நிலை வேகமாக உயர்ந்துள்ளது. வயதானவர்களிடையே பொருளாதார நெருக்கடியில் ஊட்டச்சத்து குறைபாடு நிலை வேகமாக உயர்ந்துள்ளது எனலாம்.

தற்போது அதிகரித்து வரும் குழந்தை வறுமையைக் கையாள்வதற்கான பல முன்மொழிவுகள் இருந்தாலும் குழந்தை வறுமை நாளுக்கு நாள் அதிகரித்துவரும் ஒரு நிலைமை நாடெங்கும் பரந்து காணப்படுகிறது. அரசாங்க நடவடிக்கையின் அவசரத்தை கோர சர்வதேச நிறுவனங்கள் குறிப்பாக ருNஐஊநுகு அமைப்புகள் மற்றும் றுழசடன டீயமெ காலத்துக்கு காலம் பல முனைப்புக்களை அறியத்தந்துள்ளவண்ணம் உள்ளன. பல அறிக்கைகளும் ஆய்வுகளும் வந்தவனமுள்ளன. ஆனால், ஒரு முழுமையான ஒரு கவனம் கொள்ளாத நிலை தொடர்வது மிகவும் கவலை கொள்ளும் விடையமாகும்.

எடுத்துக்காட்ட, நாம் இரண்டு முக்கிய புள்ளி விவரங்களுக்கு எமது கவனத்தை ஈர்க்கலாம்: நம் நாட்டில் 25மூ குழந்தைகள் வருமானத்தின் அடிப்படையில் வறுமையில் வாழ்கின்றனர். இரண்டாவது, 42மூ குழந்தைகள் பல பரிமாண வறுமையை அனுபவித்து வருகின்றனர், இதில் கல்வி, சுகாதாரம், வாழ்க்கைத் தரம் மற்றும் குழந்தை வளர்ச்சி போன்ற காரணிகள் அடங்கும். இந்த புள்ளிவிவரங்கள் மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல்திணைக்களம் (னுஊளு), உலக வங்கியின் (று்டீ) 2023 இலங்கை பற்றிய வறுமை மற்றும் சமபங்கு (நுஙரவைல ) சுருக்க அறிக்கை மற்றும் ருNஐஊநுகு ஆல் வெளியிடப்பட்ட இலங்கையின் பல பரிமாண வறுமைச் சுட்டெண் 2019 ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டது. இந்த மறுக்கமுடியாத ஆதாரங்கள் குழந்தை வறுமை பற்றிய வளர்ந்துவரும் நிலையை எமது கவனத்துக்கு கொண்டுவருகின்றன.

### குழந்தை வருமான வறுமை:

இலங்கையில் 2019 இல் 11.3மூ மற்றும் 2023 இல் 25மூ வறுமை விகிதம் என உலக வங்கி மதிப்பிட்டுள்ளது, இலங்கையில் ஒரு தனிநபருக்கு 3.65 அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களை நுகர்வதற்குத் தேவையான தினசரி வருமானத்தின் அடிப்படையில் வறுமைக் கோட்டின் அடிப்படையில் கணிக்கப்படுகிறது . 2019 ஆம் ஆண்டிற்கான சமீபத்திய னுஊளு வறுமை புள்ளிவிவரம் 14.3மூ ஆகும், இது உலக வங்கியின் அதே ஆண்டிற்கான மதிப்பீட்டை விட சற்று அதிகமாகும். 2019 ஆம் ஆண்டில் 0-17 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் வறுமை 16.8மூ என்று னுஊளு தெரிவித்துள்ளது. குழந்தைகளின் வறுமை ஒட்டுமொத்த வறுமையை விட அதிகமாக இருக்கும் என எதிர்பார்ப்பது நியாயமானதே, ஏனெனில் அதிக குழந்தைகளைக் கொண்ட குடும்பங்கள் ஒரு நபரின் சராசரி வருமானம் குறைவாக இருக்கும். எனவே, உலக வங்கியின் புள்ளிவிபரங்களின்படி, 2023 ஆம் ஆண்டில் குழந்தை வறுமை நிலையானதாகவும் 25மூ க்கும் அதிகமாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### குழந்தைகளின் பல் பரிமாண வறுமை:

இலங்கையின் குழந்தை பல பரிமாண வறுமைச் சுட்டெண் (ஆீஐ) போன்ற பகுதிகளில் 0-4 வயதுடைய குழந்தைகள் அனுபவிக்கும் குறைபாடுகளைப் பதிவு செய்கிறது. கல்வி, சுகாதாரம், வாழ்க்கைத் தரம் மற்றும் குழந்தை வளர்ச்சி. 2023

இல் வெளியிடப்பட்ட அறிக்கை, 2019 தரவுகளின் அடிப்படையில், குழந்தைகளின் பல பரிமாண வறுமை 42.2மூ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏழ்மையில் (42.2மூ) வளரும் குழந்தைகளுக்கு அவர்கள் வாழ்வதற்கும் செழிப்பதற்கும் தேவையான உணவு, சுகாதாரம், தங்குமிடம், சுகாதாரம் மற்றும் கல்வி ஆகியவை பெரும்பாலும் இல்லை எனலாம். “பல பரிமாணங்களில்” ஏழைகளாக எமது குழந்தைகளின் வாழ்வு நாளாந்தம் தள்ளப்பட்டு வருகிறது. அதாவது அவர்களுக்கு சத்தான உணவு அல்லது சுத்தமான தண்ணீர் போன்ற அடிப்படைத் தேவைகள் இல்லை என்பதும் கவனம் கொள்ளவேண்டிய விடையம்.



### சமூக அமைப்புக்களின் குறிப்பாக குடி சார் அமைப்புக்களின் பங்களிப்பு

தற்போதைய அதிகரிக்கும் குழந்தைகளின் வறுமை மற்றும் சமூகப் புறக்கணிப்பு பற்றிய மற்றும் விழிப்புணர்வு மிக அவசியமாகும். விழிப்புணர்வு மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் சிவில் சமூக அமைப்புகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவர்கள் குழந்தைகள் உட்பட பாதிக்கப்பட்ட சமூகங்களின் குரல்களை வலுப்படுத்தலாம், பொதுக் கருத்தை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கலாம் மற்றும் பிரச்சினைக்கு முன்னுரிமை அளித்து தீர்வு காண அரசுக்கு அழுத்தம் கொடுக்கலாம். கொடுக்கவேண்டும்.

சான்றுகள் தெளிவாக எம்முன் உள்ளன: தனிநபர்கள், முதியவர்கள் மற்றும் விளிம்பு நிலை சமூகங்களுக்கு கடுமையான நெருக்கடி ஒரு ஆபத்தான நிலைக்கு கொண்டுசெல்கிறது. பண வறுமை நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக, வறுமை என்பது குழந்தைகளின் உரிமைகளை மீறுவதாகும், அவர்களின் திறனை முடக்குகிறது. வறுமை குழந்தைகளின் அறிவாற்றல் வளர்ச்சியைப் பாதிக்கிறது, மேலும், வயது வந்தோருக்கான அடிப்படை வசதிகள் வழங்கும் திறன் பூச்சியமே. குறைந்த வருமானம் பெரும் குடும்பங்களின் மற்றும் அவர்களின் ஆரோக்கிய நிலை மிகவும் கவனத்துக்குரியவை. கற்றல் பொருட்களை வாங்க முடியாதபோது இளம் பிள்ளைகள் மெதுவாக வாசிப்பு திறனை வளர்த்துக் கொள்கிறார்கள். வளர்ந்து வரும் ஏழைகளின் நீண்டகால மன அழுத்தம் மூளையில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துவதாக தோன்றுகிறது: குழந்தைகள் நீண்ட காலம் வறுமையில் வாழும் போது அவர்களின் மன அழுத்தத்தின் அளவுகள் அதிகரிக்கும் மற்றும் மிகவும் குறிப்பிடத்தக்க நீண்ட கால பாதிப்புக்களை வெளிக்காட்டும்.

தற்போதைய நிலையில் மாவட்ட மட்ட குடி சார் அமைப்புக்கள் (னுளைவசைஉவ பேுழுள ஊழுளெழசவரைஅ) மாவட்டத்தின் குழந்தை வறுமை மீதான ஒரு உடனடி கவனத்தை உள்வாங்கி வெளிக்கொணர வேண்டிய கட்டாய நிலை வந்துள்ளது. கூட்டுறவு அமைப்புக்கள், கிராம மட்ட சங்கங்களின் ஒட்டு மொத்த ஒருங்கிணைவும் அசைவியக்கமும் பெரிய விழிப்புணர்வை தரும். ஊழுஏஐனு19 காலத்தில் இருந்த உணவு பாதுகாப்பு மீதான அக்கறை தற்போது குறைந்துவிட்டது. நெருக்கடி வரும் போது வரும் அக்கறை நெருக்கடி குறையும் போது குறைவடைவது இயல்பு. தற்போது நெருக்கடி என்பது விளிம்புநிலை மக்களை சூழ்ந்து உறிஞ்சிவருகிறது. பொது புத்தியில் அவர்கள் மீதான அக்கறை குறைந்துவருவதும் அவர்கள் மீதான வழமையில் நிலை கொள்ளும் அக்கறையின்மையின் ஒரு பக்கமாகவும் இருக்கலாம். ஆனால், தற்போதைய நெருக்கடி என்பது மிகவும் நொந்து போன சமூகத்தின் மீதான ஒரு வலுவான தாக்கமாக தற்போதைய சூழ் நிலை மறுவியுள்ளது.

முடிவாக, அதிகரிக்கும் குழந்தை வறுமையின் மீதான ஒரு முழுக்கவனம் தற்போதைய முன்னுரிமையாகும். அதில் சமூக பொருளாதார அமைப்புக்களின் வகி பாகம் அவசியம் தேவையாகியுள்ளது. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் சர்வ தேச அமைப்புக்களின் அதி உச்ச கவனம் என்பது அதிகரிக்கும் வறுமையின் பால் இருந்தாலும் எமது வலுவான ஒரு சமூக அக்கறை அதைவிட மேலோங்கி இருக்கவேண்டும். அரசின் தற்போதுள்ள வளங்களின் அதியுச்ச கவனம் அதிகரிக்கும் குழந்தைகளின் வறுமையை குறைக்க உதவேண்டும்.

இலங்கையின் சமீபகால நெருக்கடிகளின் போது மோசமடைந்துள்ள குழந்தை வறுமை மற்றும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடு ஆகியவற்றின் அவசரப் பிரச்சினையை எடுத்துக்காட்டுகின்றன. நாட்டில் குழந்தைகளின் ஊட்டச்சத்தை மேம்படுத்துவதற்கான பல அரசு முயற்சிகள் எடுத்தாலும், பொருளாதார நெருக்கடியால் அரசின் செயல்பாடுகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக நெருக்கடியான காலங்களில் குழந்தைகளை மையமாகக் கொண்ட சமூகக் கொள்கைகளை நிலைநிறுத்துவதில் அதிக கவனம் கொள்ளவேண்டும். அக்கறையுடன் கவனம் செலுத்தப்பட வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம்தான், குழந்தைகளின் வளர்ச்சி நெருக்கடிகளால் பாதிக்கப்படாமல் இருப்பதையும், அவர்கள் எதிர்கொள்ளும் இன்னல்களைப் பொருட்படுத்தாமல் அவர்கள் முன்னேறுவதற்கான வாய்ப்பைப் பெறுவதையும் உறுதி செய்ய முடியும்.

சமூக அமைப்புக்கள் பலம் மிக்க சமூக மூலதனத்தை கொண்டுள்ளன. அரசின் பலத்தை விட சமூக அமைப்புக்களின் செல்வாக்கு பாதிப்புக்குள்ளாகியுள்ள சமூகங்கள் மீது மிகுந்த நேர்மறை தாக்கம் கொண்டவை. சமூகத்தின் முகங்களும் அவர்களின் குரல்களும் சமூக அமைப்புக்கள் தான். தொடரும் வறுமை நிலை என்பது கடந்த கால போர்நிலையை விட அதிகமாகும். போர்க்காலத்தில் பல நிறுவனங்கள் மக்கள் மீதான அக்கறை கொண்டு அவர்களின் உணவு மட்டும் பாதுகாப்பில் மிக கவனம் கொண்டு சர்வ தேச மட்ட உதவியுடன் இயங்கின. தற்போது முழுப்பொறுப்பும் அரசின் மீதே. அரசு தன் இயக்கத்துக்கு திண்டாடவேண்டிய உள்ளது. ஆகவே இருக்கும் ஒரு தெரிவு நமது கைகள் தான். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பது உண்மையான வாக்கியம். ஆனால், மிக முக்கியமானது ஒன்றிணைவுடன், திட்டமிட்ட திரள்வு தான் மிக முக்கியம்.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0777304010 / 0702675575

# இலங்கையின் புதிய அரசும் பொருளாதார சவால்களும்

இலங்கையின் அண்மைய அரசாங்க மாற்றம் நாட்டின் பொருளாதார எதிர்காலம் தொடர்பில் எதிர்பார்ப்பு மற்றும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான புதிய நிர்வாகம் பதவியேற்ற போது, கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் நீண்டகால கட்டமைப்பு சிக்கல்களால் தீவிரமடைந்துள்ள ஆழமான பொருளாதார சவால்களை கடந்து செல்லும் கடினமான பணியை அது எதிர்கொள்கிறது.

புதிய அரசாங்கத்தின் வெற்றிக்கான திறவுகோல், நாட்டைப் பாதித்துள்ள பொருளாதாரச் சரிவைச் சமாளிக்கும் திறன்தான். இலங்கையின் பொருளாதாரம் அதிக கடன் அளவுகள், தேய்மானம் பெறும் நாணயம் மற்றும் அந்நிய செலாவணி கையிருப்பு குறைதல் ஆகியவற்றுடன் போராடி வருகிறது. இந்தச் சிக்கல்கள் பொது நிதியில் பாதிப்பை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் முதலீட்டாளர்களின் நம்பிக்கை மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையையும் பாதித்துள்ளது.

மேலும், COVID-19 தொற்றுநோய் இலங்கையின் சுற்றுலாத் துறைக்கு கடுமையான அடிகளை ஏற்படுத்தியுள்ளது, இது ஒரு முக்கிய பொருளாதார தூணாகும், இது வேலையின்மை மற்றும் வறுமை நிலைகளை மேலும் மோசமாக்குகிறது. புதிய அரசாங்கம் பொது சுகாதார பாதுகாப்பை உறுதி செய்யும் அதே வேளையில் சுற்றுலாவை புதுப்பிக்க வலுவான உத்திகளை வகுக்க வேண்டும். ஆனால் சுற்றுலாத்துறையில் அண்மைக்காலத்தில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சி நம்பிக்கையைக் கொடுப்பதாக உள்ளது.

ஊழலை நிவர்த்தி செய்வதும், நிர்வாகத்தை மேம்படுத்துவதும், நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும், பொருளாதார மீட்சிக்கு அத்தியாவசியமான வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கும் முக்கியமானதாக இருக்கும். கூடுதலாக, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு உகந்த சூழலை வளர்ப்பது மற்றும் புதுமைகளை ஊக்குவிப்பது பொருளாதார பல்வகைப்படுத்தல் மற்றும் வளர்ச்சியை ஊக்குவிக்கும்.

மேலும், நிலையான வளர்ச்சி நடைமுறைகள் மற்றும் உள்கட்டமைப்பில் முதலீடுகள் போட்டித்தன்மையை அதிகரிக்கவும் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்க்கவும் இன்றியமையாதவை. டிஜிட்டல் உள்கட்டமைப்பு மற்றும் திறன்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துவது உலகப் பொருளாதாரத்தில் இலங்கையின் நிலையை மேலும் உயர்த்த முடியும்.

முடிவாக, இலங்கையின் புதிய அரசாங்கம் குறிப்பிடத்தக்க பொருளாதார சவால்களை எதிர்நோக்கும் அதேவேளை, துணிச்சலான சீர்திருத்தங்கள் மற்றும் மூலோபாய முதலீடுகளுக்கான வாய்ப்பையும் வழங்க வேண்டும். நிதி ஒழுக்கத்திற்கு முன்னுரிமை அளிப்பதன் மூலமும், வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதன் மூலமும், வணிக நட்புச் சூழலை வளர்ப்பதன் மூலமும், இலங்கை நிலையான பொருளாதார வளர்ச்சி மற்றும் செழிப்புக்கான பாதையில் செல்ல முடியும்.

# வாரம் ஒரு குடிசை கைத்தொழில்- தலையணையுறை தைக்கலாம் வாருங்கள்

**சரி, இதோ இந்த குஷன் கவர் தைப்பது எப்படி என்பதிலிருந்து நம் வகுப்புகளைத் தொடங்குவோம். சரியான அளவுகள், சரியான கட்டிங், சீரான தையல் இவற்றையெல்லாம் முதல் முறையே சரியாக வரவேண்டும் என்று நினைக்காதீர்கள். பழகப் பழகத்தான் எந்தக் கலையும் கை வரும். இரண்டு தடவை சொதப்பலாம். மூன்றாம் முறை சரியாக வரும். நான்காம் முறை நேர்த்தியாக வரும். முயற்சியில் தான் எல்லாமே!**

ஆனந்தி

தையல் கலையில் நிறைய பேருக்கு ஆர்வம் இருக்கும் நேரமின்மை காரணமாக வீட்டிலிருக்கும் தையல் இயந்திரம் துருப்பிடிக்க ஆரம்பிக்கும் அன்றாட வேலைகளில் குறைந்த பட்சம் ஒரு மணி நேரம் ஒதுக்கினாலே வீட்டுக்குத் தேவையான துணிகளை நாமே தைத்துக் கொள்ள முடியும். வேலைக்குச் செல்பவர்கள் ஓய்வுக்காக ஒரு மணி நேரம் ஒதுக்கலாம். அலுவல் வேலைகளிலிருந்து மாற்றுக்கு இதை முயற்சிக்கலாம். எல்லாம் சரி தையல் தெரியாது என்பவர்கள், கவலை கொள்ளத் தேவையில்லை. தையல் ஒன்றும் அவ்வளவு கடினமான வேலை இல்லை. கற்பது எளிது. இப்போது சிறிய அளவில் மின்சாரத்தில் இயங்கும் தையல் இயந்திரங்கள் வாங்கி வீட்டு உபயோகத்துக்கு பயன்படுத்தலாம்.

சரி, இதோ இந்த குஷன் கவர் தைப்பது எப்படி என்பதிலிருந்து நம் வகுப்புகளைத் தொடங்குவோம். சரியான அளவுகள், சரியான கட்டிங், சீரான தையல் இவற்றையெல்லாம் முதல் முறையே சரியாக வரவேண்டும் என்று நினைக்காதீர்கள். பழகப் பழகத்தான் எந்தக் கலையும் கை வரும். இரண்டு தடவை சொதப்பலாம். மூன்றாம் முறை சரியாக வரும். நான்காம் முறை நேர்த்தியாக வரும். முயற்சியில் தான் எல்லாமே!

சற்றே திக்கான பயன்படாத துணியை எடுத்துக் கொள்ளுங்கள். அது நைந்து போகாமல் இருக்க வேண்டும், அப்போதுதான் தையல் போட வசதியாக இருக்கும். உங்கள் வீட்டின் குஷன் துணியின் அளவை குறித்துக் கொள்ளுங்கள். உதாரணத்துக்கு நீள, அகலம் 12ழ12 இன்ச் அளவில் இருப்பதாகக் கொள்வோம்.

இந்த அளவில் உறை தைக்க 16 இன்ச் நீளத்தில் 14 இன்ச் அகலத்தில் ஒரு துண்டை வெட்டிக் கொள்ளவும். 10 இன்ச் நீளத்தில் 14 இன்ச் அகலத்தில் மற்றொரு துண்டை வெட்டவும்.

முதல் துண்டில் அகல வாக்கில் ஒரு இன்ச் அளவிற்கு மடித்து தைத்துக் கொள்ளுங்கள்.

இரண்டாவது துண்டிலும் இதே போல அகல வாக்கில் ஒரு இன்ச்சிற்கு மடித்து தைத்துக் கொள்ளவும்.

தைத்த முடித்ததும் இதோ இப்படி வைத்து நான்கு புறமும் தைப்பதற்கு



ஏற்ப ஒழுங்கு படுத்தி பாருங்கள்.

ஒழுங்குபடுத்தியது தைக்கும்போது அளவு சரியாக வர துணிகளை மடித்த வாக்கிலே வைத்து அயர்ன் செய்துகொள்ளுங்கள்.

முதலில் தனித்தனியாக தைத்தவற்றைத் தவிர, இரண்டு தனித்தனி துண்டுகளின் நான்கு பக்கங்களையும் உள்பக்கமாக வைத்து ஒரு இன்ச் இடைவெளிக்குள் தையல் போடுங்கள். நான்கு பக்கமும் தையல் போட்டு முடித்ததும் தலையணை நுழைக்க வழி உண்டாகியிருக்கும். இதன் வழியே உறையை வெளிப்பக்கமாக திருப்புங்கள். இதோ நீங்களே தைத்த குஷன் உறை தயார். இதற்கு சிப் அல்லது பட்டன் வைக்கத் தேவையில்லை. அடுத்தடுத்து நாம் விதவிதமாக குஷன் உறைகள் தயாரிக்கலாம், இதை முயற்சித்துவிட்டு வாருங்கள்.




## இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 2,03,250 ரூபா.

24 கரட் தங்கம் 2,21,000 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.




**கேள்வி -** அண்மைக்காலத்தில் மரக்கறிகளின் விலை வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதை சந்தை நிலவரங்கள் வெளிப்படுத்திவருகின்றன. இதற்கு ஆட்சி மாற்றம் காரணமா? வேறு காரணம் என்ன உள்ளது?

**க.கணபதிப்பிள்ளை,**
**நெல்லியடி.**

**பதில் -** ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கும் நிலையில் இந்த விலை வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றதே தவிர, அதற்கும் இதற்கும் எந்தவிதமான தொடர்புகளும் இருப்பதாகத் தெரியவில்லை. மரக்கறி விலைகளைத் தீர்மானிப்பதில் நுவரேலியா பொருளாதார மத்திய நிலையத்தின் கேள்வி - வழங்கல் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. அங்கிருந்துதான் ஏனைய இடங்களுக்கு மலையக மரக்கறிகள் பெருமளவுக்கு வருகின்றன. தம்புளை விலையை நிர்ணயிப்பதிலும் அதன் செல்வாக்கு அதிகமாக இருக்கின்றது.

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகளின் விலை குறைந்துள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல் தெரிவிக்கின்றது.

இதனால் விவசாயிகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதும் உண்மை. மரக்கறி வகைகளின் உற்பத்தித்தொகை அதிகரித்துள்ளதால், விலைகள் குறைவடைந்திருப்பதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் அதிகளவில் மரக்கறி உற்பத்தி செய்யப்படுகின்ற மாவட்டங்களில் நுவரெலியாவும் ஒன்றாகும் இம்முறை மரக்கறி வகைகளின் விலைகளில் ஏற்பட்டுள்ள எதிர்பாராத வீழ்ச்சியால் கைவிடப்பட்ட நிலையில் இன்று காட்சியளிக்கின்றன.

நுவரெலியாவில் அதிகமானோர் விவசாயத்தை மாத்திரம் நம்பி வாழ்க்கை நடத்துகின்றனர். இதனூடாக இம்முறை கரட், லீக்ஸ் போன்ற மரக்கறிகளை பயிரிட்டுள்ளனர். இதே ஐந்து மாதங்களுக்கு முன்பு வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் துரிதமாக அதிகரித்து ஒரு கிலோ கரட் 1800 ரூபாவுக்கு

கொள்வனவு செய்து 2000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

தற்போது நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ கரட்டின் மொத்த விலை 70 ரூபா தொடக்கம் 80 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது. கரட் உற்பத்தி அதிகமாகியிருப்பதாலும் சந்தையில் கரட்டின் விலை குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மரக்கறி வகைகளில் விலையில் மாற்றம் ஏற்பட்டிருந்த போதிலும் கிருமி நாசினிகள், நாளாந்த கூலி, பசளை உள்ளிட்டவற்றில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை.

உரிய விலையின்றி விவசாய நிலங்களில் கண்முன்னே அழிவடைக்கின்ற மரக்கறி உற்பத்திகளை பார்க்க மிக வேதனையாக இருப்பதாகவும் பொருளாதார மையங்களில் உரிய விலை கிடைக்காத காரணத்தால் மரக்கறிகளை குப்பையில் போடவேண்டியதாக இருக்கிறது என அங்க

லாய்ந்துக் கொள்கின்றனர். இவ்வாறான நிலையில், உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதற்கான உரிய செயற்பாடுகளை முன்னெடுப்பதுதான் புதிய அரசின் பணியாக இருக்க வேண்டும்.

## உங்கள் கேள்விகளை

தமிழர் பொருண்மியம்,
கிறீன் மீடியா ஹவுஸ்,
68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.
வாட்ஸ் அப் முகவரி +94 777 304010




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 200/= |
| உருளைக்கிழங்கு | 180/= |
| பச்சை மிளகாய் | 200/= |
| தக்காளி | 210/= |
| மரவள்ளிக்கிழங்கு | 180/= |
| கோவா | 200/= |
| கரட் | 200/= |
| வாழைக்காய் | 170/= |
| சின்ன வெங்காயம் | 220/= |
| பாகற்காய் | 300/= |
| வெண்டிக்காய் | 120/= |
| பயற்றங்காய் | 160/= |
| பீற்றூட் | 80/= |
| முருங்கைக்காய் | 240/= |
| தேங்காய் | 130/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 198/= |
| கனடா டொலர் - | 215/= |
| சீன யுவான் - | 40/= |
| யுரோ - | 321/= |
| ஜப்பான் யென் - | 1.9/= |
| சிங்கப்பூர்டொலர் - | 224/= |
| ஸ்ரேலிங் பவுண் - | 386/= |
| சுவிஸ் பிராங் - | 341/= |
| அமெரிக்க டொலர் - | 292/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 208/= |
| கனடா டொலர் - | 224/= |
| சீன யுவான் - | 43/= |
| யுரோ - | 334/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர் டொலர் | 234/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 400/= |
| சுவிஸ் பிராங் - | 359/= |
| அமெரிக்க டொலர் - | 301/= |

உப்பிடி வீடு வழியை சம்பலுஞ்சோறும் எண்டான்ன சாப்பிடுறதால குடும்பத்தில ஒரு பந்தம் பாசம் பிணைப்பு இருந்தது. முந்தி வீடுகளிலை காலமை பழஞ்சோறும் இரவுச் சாப்பாடும் ஆச்சியோ அம்மாவோ குழைச்சுக்குடுக்க முத்தத்தில எல்லாரும் வட்டமா இருந்து வாங்கித்தின்னுவினம்.

# எங்கட ஆச்சி



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

நேற்றுப்பின்னேரம் வீட்டம்மா நிண்டாப்போல இண்டைக்கு இரவைக்கு எங்கையெண்டான்ன சாப்பிடப்போவம் எண்டா. நானும் சரியெண்டன். இல்லாட்டில் உங்கை எல்லாரும் கேஎவ்சி, மக்டொனால்ஸ், பிஸ்ஸாகட் எண்டு போய்த்தின்னுகினம். இஞ்சை ஒண்டுக்கும் வக்கில்லை எண்டு துடங்கி என்ரை பரம்பரைப் பெருமை எல்லாம் பேசி பரிசுகெடுத்துப்போடுவா எண்ட பயத்திலை ஓமெண்டன்.

ஆனா ஒரு பக்கத்தில எனக்கெண்டா இண்டைக்கு சமைக்கிற வேலை மிச்சம் எண்டு சந்தோசம். நான் அப்பிடிச்சொன்ன பிறகும் பேசாம இருக்க பேந்தென்ன வெளிக்கிடன் எண்ட இப்ப பாரதிகண்ணம்மா இருக்கு அது முடியத்தான் வெளிக்கிடலாம் எண்டு இருக்க நான் வெளியில இப்ப சாப்பாட்டுக்கு வரப்போற பில்லை என்னண்டு சரிக்கட்டுறது எண்டு திட்டங்களைத் தீட்டத் தொடங்கினன்.

இப்பிடித்தான் மற்றவை செய்யினம்தானே நாங்கள் ஏன் செய்யப்படாது. அப்பிடிச்செய்யாம இருந்தா எவ்வளவு வெக்கயீனம் எண்டு வெளிக்கிட்டே வாற செலவுகளைச் சமாளிக்க ஏலாம கடனை உடனை வாங்கிச்செய்து போட்டுப்பேந்து அதுகளைக் குடுக்க வழியில்லாம உங்க எத்தினையோ குடும்பத்துக்குள்ளை குத்துவெட்டுப்படுகினம் எண்டு எங்கட ஆச்சி நெடுகவும் சொல்லுறவ .உந்தக்கடையில சாப்பிடுறது எண்டது என்னமோ நாகரீகம் எண்டு சனம் நினைக்குதுஎண்டுவா அவ .

உங்க வெள்ளவத்தைப் பக்கங்களில கன வீடுகளில உலையே வைக்காயினம் அடுப்பு மூட்டாயினம். ஒராள் ரெண்டு பேருக்கு என்னத்துக்கு அடுப்பு மூட்டி மினக்கெடுவான் . அதைவிடக் கடையில வாங்கித்தின்னலாம் எண்டுவினம். அதிலையும் சிலர் அடுக்களை எங்க கிடக்கு அதுக்குள்ளை என்ன சாமான் கிடக்கெண்டு ஆருக்குத் தெரியும் எண்டு பெரிய அவுறுகம் விடுவினம்.

சிலர் அடுப்பு மூட்டிப் பொரிச்சாக் கரிச்சா அடிச்ச பெயின்ற் பழுதாப்போம் போட்டிருக்கிற கேட்டின் பழுதாப்போம் எண்டுவினம். எனக்குத் தெரிஞ்ச ஒருத்தி இருக்கிறா அவ தனக்கு சமைக்க வெக்கமாக்கிடக்கு. இனி நான் சமைச்சுச் சாப்பிட்டா வெளியில இருக்கிற என்ரை மகனுக்கும் வெக்கமெல்லே . அவன் தேவையான காசு அனுப்புறான் நாங்க வாங்கித்திண்டு போட்டு இருக்கிறம் எண்டுவா.

உதில பகிடி என்னண்டால் அவவின்ரை மோன் அங்க வெளிநாட்டில ஓடருக்குச் சமைச்சு சாப்பாடு குடுக்கிறதுதான் செய்யிற வேலை . அந்தச் சமைச்சு சாப்பாடு வித்து வாற காசை இஞ்சை அனுப்பினா அவை ஆத்தைக்காறி சமைச்சா வெக்கம் எண்டு விசும்பு விட்டுக்கொண்டு திரியிறா.

முந்தி எங்கட ஊரிலையும் அஞ்சாறு சாப்பாட்டுக் கடையள் இருந்தது .எண்டாலும் உந்த ஒரு கடையளையும் பெட்டையளோ குமரியளோ பெண்டுகளோ ஏன் கிழடியளோ எட்டியும் பாக்காயினம்.



முந்தி எவை எங்க வேலைக்குப் போனாலும் சாப்பாடு வீட்டில இருந்து கட்டிக்கொண்டு போவினம். தற்செயலா சாப்பாடு கொண்டு போகாமப்போனாலும் பேந்து தெருவழியை தின்னாம சாப்பாட்டுக்கு வீடுவழியை வந்து சேருவினம்.

எந்தக்குடிகாறன் வெறிகாறனும் எண்டாலும் வீட்டை வந்து ஒரு பிடியெண்டான்னை திண்டு போட்டுத்தான் விறாந்தையில கிடந்து பிரளுவாங்கள்.



உப்பிடி வீடு வழியை சம்பலுஞ்சோறும் எண்டான்ன சாப்பிடுறதால குடும்பத்தில ஒரு பந்தம் பாசம் பிணைப்பு இருந்தது. முந்தி வீடுகளிலை காலமை பழஞ்சோறும் இரவுச் சாப்பாடும் ஆச்சியோ அம்மாவோ குழைச்சுக்குடுக்க முத்தத்தில எல்லாரும் வட்டமா இருந்து வாங்கித்தின்னுவினம்.

அதால அந்தப்பிணைப்பு எக்கச்சக்கமா இருந்தது. ஆனா இப்ப கடைவழியை வாங்கித் தின்னிறவைக்கு உந்தப்பாசம் எல்லாம் குடும்பத்தில இருக்கிறதை விட சாப்பாடு குடுக்கிற சாப்பாட்டு கடைக்காறன் மேலதான் இருக்கும் எண்டு அப்பு பகிடி விடுவார் .

# உங்கள் படைப்பாக்கத் திறனுக்கு ஒரு வாய்ப்பு



நவீன காலத்தில் உற்பத்தித் துறையில் ஈடுபடும்போது அதனை மேம்படுத்தவும் இலகுபடுத்தவும் புதிய உபகரணங்கள் அல்லது இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.

அவ்வாறான கருவிகள் பலவற்றை கடந்த காலங்களில் எம்மவர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

உங்களிடமும் அவ்வாறான ஒரு யோசனை இருந்து, அதனைச் செயற்படுத்த உதவி தேவையாக இருந்தால் அதனை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராக இருக்கின்றது.

இரண்டு பிரிவுகளாக இதற்கான உதவிகளை வழங்குவதற்கு பொருண்மியம் குழுவினர் திட்டமிட்டுள்ளார்கள்.

## உள்நாட்டு உற்பத்தி மேம்பாட்டிற்கான புதிய இலகு கருவிகளை கண்டுபிடித்தல்

1. வேலையை இலகுபடுத்துவதும் நேரத்தை மிச்சப்படுத்துவதுமாக அமைதல்.
2. சமூக பாவனைக்கு உகந்ததாகவும் பாதுகாப்பானதாகவும் அமைதல்.
3. கூடுதலாக கிடைக்கப்பெறும் வளங்களைக்கொண்டு உருவாக்க கூடியதாக அமைதல்.
4. ஏற்கனவே கண்டுபிடிக்கப்படாத, சொந்த தயாரிப்பாக இருக்க வேண்டும்.
5. நியாயமான விலையில் எல்லோருக்கும் கிடைக்ககூடியதாகவும், அனைவரும் பயன்படுத்தகூடியதாகவும் அமைதல்.

இதற்கான உங்கள் யோசனைகளை நீங்கள் முன்வைக்கலாம். உங்களுடைய முன்மொழிவுடன் அதற்குத் தேவையான செலவுத் தொகையும் குறிப்பிடப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்படும் திட்டங்களுக்கு தேவையான நிதி உதவியை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராகவுள்ளது.

## மக்களை வலுப்படுத்தும் சனசமூக நிலையங்களினை அடையாளப்படுத்தல்

1. பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.
2. இவர்கள் தமது சமூகத்து மக்களையும் உள்ளூர் வளங்களையும் இணைத்து திட்டங்களை மேற்கொள்வது பொருத்தப்பாடானது.
3. அவர்கள் தமது சமூகத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிவரும் பணிகளையும் , வரும் காலத்தில் உள்நாட்டு அல்லது தமது சமூகத்தில் செயற்படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கும் திட்டங்களையும் சமர்ப்பிக்கலாம்.
4. திட்டங்கள் அனைத்தும் அந்த சமூகத்தின் நன்மை கருதுவனவாயும், அவர்களனைவரதும் வாழ்வாதாரத்தை பலப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.
5. கண்காணிப்பு குழுவினரால் ஆராய்ந்து முடிவுறுத்தப்படும் திட்டங்கள் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கான நிதி உதவிகளும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்கள் அடுத்த வாரம்

உங்களுடைய முன்மொழிவுகளை வாட்ஸ் அப் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம்.

**வாட்ஸ் அப் இலக்கங்கள் +94 777 30 4010 / +94 702 67 5575**
**மின்னஞ்சல் - tamilseconomy@gmail.com**

**தென்னிந்திய அரசர்களின் படையெடுப்பின் பொது பொரும்பாலான சிறுகுளங்களை கைவிட்டு மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். பிரித்தானியர் அந்தக் குளங்களை காடுகளில் அலைந்து கண்டு பிடித்து, மக்களைக் குடியேற்றி கிராமங்களை மீள அமைத்தனர். சோழர்கள் காலத்திலும் குளங்கள் கட்டப்பட்டதாக வலாறுகளை சொன்னாலும் அதற்கான ஆதாரங்கள் வலுவாக இல்லை.**

# மன்னர்கள் காலத்தில் குளங்கள் பெற்றிருந்த முக்கியத்துவம்

## பார்வை 8



தமிழ்க்கவி



குளங்களும் வளங்களும் இந்த மண்ணின் சுய பொருளாதார வெற்றிக்கு வித்திடுவன ஏன்பது சிறு குழந்தைகளுக்கும் தெரியும். ஆனால் குளங்களைப்பற்றி பேசப்புகும்போதே அவற்றுக்காக மன்னர்கள் காலத்திலிருந்தே எத்தனை தொழில் நுட்பங்களை எத்தனை விதமான நடைமுறைகளை கையாண்டார்கள் என்பது தெரியவரும்.

ஆற்றை மறித்து இந்த குளங்களை உருவாக்கினாலும் அவை வற்றிப் போகும் காலங்களில் ஆற்றுக்குள்ளே ஊற்று வெட்டி குடிநீராகவும் தமது தோட்டப் பயிர்களுக்காகவும் நீரைப்பெறுவர் மக்கள். ஆக குளங்கள் வற்றினாலும் நீர் ஊறிக் கொண்டே இருக்கும். அதனுள் மீன்கள் கூட தம்மை மறைத்து வாழ்வதை காணலாம். ஒவ்வொரு சிற்றாறும் பிறக்கும் இடத்தையும் அது கடலில் கலக்கும் இடத்தையும் அடைய முதல் நிலத்திலிருக்கும் சகல தாவரங்களையும் உயிரிகளையும் வளர்த்துச் செல்கின்றன. நீர் பற்றி சொல்வதாயின் அதன் ஒவ்வொரு வடிவமும் மனிதனுக்கோ மண்ணில் வாழும் உயிரினங்களுக்கோ பயன்படுகிறது. வேறு வேறு வடிவங்கள் எடுத்தாலும் நின்றால் ஏரி நிமிர்ந்தால் அருவி, நடந்தால் ஆறு, கடலில் கலந்தால் ஆவி. ஏன்ற வைரமுத்துவின் கவிவரிகள் நினைவுக்கு வரும். குளங்களும் அவற்றை வெட்டிய பெருமகன்களின் பெயரும் உள்ளன.



மாபெரும் வரலாற்று நூல்களில் எல்லாம் அதற்கான சான்றுகள் உள்ளன. மகன் காசியப்பனால் சிறைப்பிடிக்கப்பட்டிருந்த மன்னன் தாது சேனன். நாட்டின் பெருமளவு செல்வங்களை வீணடித்துவிட்ட தந்தையிடம் உனது பெறுமதியான சொத்துகளை எங்கே வைத்திருக்கிறாய் என்று அவனைக் கேட்டபோது அவன் தன்னை கலாவேவவுக்கு அழைத்துச் செல்ல பணித்தான். ஆங்கேதான் தன் செல்வம் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினான். அதாவது தனது செல்வம் அந்தக்குளம்தான் என்றான். அவனது ஆட்சிக்கால த்தில், பதினெட்டு சிறிய குளங்களையும் பதினெட்டு பெரிய குளங்களையும் கட்டி வைத்தான். புதிய வகையில் நீர்ப்பாசன தொழில் நுட்பத்தை இந்தக்குளங்களில் அமைத்தான் என வரலாறு உண்டு.

தென்னிந்திய அரசர்களின் படையெடுப்பின் பொது பொரும்பாலான சிறுகுளங்களை கைவிட்டு மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். பிரித்தானியர் அந்தக்



குளங்களை காடுகளில் அலைந்து கண்டு பிடித்து, மக்களைக் குடியேற்றி கிராமங்களை மீள அமைத்தனர். சோழர்கள் காலத்திலும் குளங்கள் கட்டப்பட்டதாக வலாறுகளை சொன்னாலும், அதற்கான ஆதாரங்கள் வலுவாக இல்லை. “சோடையன் கட்டுக்கரை” “வவுனிக்குளம்” ஆகியவை எல்லாளனால்



கட்டப்பட்டிருக்கலாம் என கூறப்படுகிறது. ஏன்றாலும் தொழில் நுட்ப மாறுதல்களை வைத்தோ அல்லது அமைப்பு குறிப்புகளை வைத்தோ அதை நிறுவ முடியவில்லை. ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் வான் டி கிராவ் என்கிற டச்சுத் தளபதி இந்தக்குளம் பற்றி ஒரு திட்டத்தை வரைந்திருந்தான் என்றாலும் எதுவும் நடக்கவில்லை.

ஆயிரத்து எண்ணூற்று எண்பத்து ஒன்பதில் இலங்கை அரசு பிரதிநிதியாகவிருந்த பொன்னம்பலம் இராமநாதனால் அறிக்கையிடப்பட்டு நிறைவு செய்தாலும் வேலைகளில் எந்த முன்னேற்றமும் இன்றி கிடப்பில் போடப்பட்டது . ஆயிரத்து தொளாயிரத்து இரண்டாம் ஆண்டு பல தடைகளைக் கடந்து இந்த குளத்தின் அபிவிருந்தி வேலைகள் முடித்து வைக்கப்பட்டதாக தெரிகிறது.

இந்த ஆண்டில்தான் இரணைமடுக்குளமும் புனரமைக்கப்பட்டது. இலங்கைக்கு முதலாவது கார் வந்ததும் இந்த ஆண்டில்தான். நல்லவர்களோ கெட்டவர்களோ எமது நாட்டின் அபிவருத்திக்காக கட்டுக்கரைக்குளத்திற்கு ஐம்பதாயிரம் ரூபாக்களும் இரணைமடுக் குளத்திற்கு ஐம்பதாயிரம் ரூபாவும் ஒதுக்கினார்கள். அது கிடைத்து அவற்றின் வேலைகள் நிறைவுற்றன. கட்டுக்கரைக்குளத்தின் கட்டு அமைப்பு காற்றுக்கு எதிரான திசையிலிருப்பதால் அதன்கட்டில் நீரலைகள் மோதி குளக்கட்டு படிப்படியாக கரைந்து உடைப்பெடுக்க கூடும் என்பதால் உள்கட்டுக்கு கொன்கிறீட் பாதுகாப்பு கட்டின் உட்புறமாக அமைத்திருக்கிறது. பன்னிரண்டு அடி உயரம் இருபத்துநாலு அடி அகலமானதுமான சுவர் அறுநூற்றுநாற்பது அடி தூரம் கட்டப்பட்டுள்ளது.

எது எப்படியாயினும், கதம்பநதியின் (அருவி ஆறு அல்லது மல்வத்து ஓயா) வழித் தோன்றலாக விளங்கும் கட்டுக்கரைக்குளம் அசுரன் குளமாக கணிக்கப்படுவது அதன் பிரம் மாண்ட விசாலத்தை வைத்துத்தான். அதன் அணைக்கட்டு சுமார் பதினைந்து மைல் நீளமானது. இயற்கையாக நீரேந்து பிரதேசம் முப்பத்தெட்டு சதுரமைல் பரப்பளவை கொண்டுள்ளது. ஒருபுறத் தேக்கம் அணைக்கட்டில் ஆரம்பித்து செல்லும் இது அகத்திமுறிப்பை தொட்டு நிற்கும். பத்து சுலுசுகளைக் கொண்டது ஏழு அதன் கட்டிலும் மூன்று உள்ளக வாய்பகால்களிலும் பொருத்தப்பட்டுள்ளது வான் அல்லது அலைகரை தேக்கம் கட்டில் ஒருபுறமும், வலதுபறமாக அகத்தி முறிப்பில் மறுபுறமும் அருவி ஆற்றைத்தடவி நிற்கிறது. இதன்கீழ் நூற்றி அறுபத்திரண்டு சிறு குளங்கள் உப நீர்ப்பாசன வழங்கல் குளங்களாக அமைந்துள்ளது. புல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரமாக இங்கு மீன்பிடியும் உபரி கைத்தொழில்களும் செழித்து வருகிறது. நிலத்தடி நீர் மிகவும் காத்திரமாக கிடைக்கிறது.

தேசப்படத்தை விரித்து வைத்து சோடையன் கட்டுக்கரை அல்லது அரக்கன்குளம் என்பதை பாருங்கள் அதன் நீர்ப்பாசனம் எவ்வளவு விசாலமாக தெரிகிறது எனக்காணுங்கள் . அவ்வளவு வளமும் பெருமையும் மிக்க குளம் ஒரு வரப்பிரசாதம். இந்தக்குளத்தின் அனுசரணையில் நெல் வேளாண்மை சிறந்து பயனளிக்கிறது.ஃ அங்கு இன்று நாற்று நடுகை கையாளப்படுகிறது. நூற்று நடுகைக்காலத்தில் வெளி மாவட்டங்களிலிருந்தும்பெருந்தொகையான ஆண்களும் பெண்களும் இங்கே வந்து தங்கிநின்று தொழில் செய்வார்கள் அறுவடைக்காலத்திலும் இதேபோல வந்தார்கள் யுந்திரங்கள் அறுவடை செய்ய ஆரம்பித்த பின் தொழிலாளர்கள் வரவு குறைந்து விட்டது. ஒரு மாபெரும் நெற்களஞ்சியமாக திகழும் மன்னாரின் மண்ணுக்கு இந்த கட்டுக்கரைக்குளமே ஆதாரம்.

நெல் வேளாண்மையுடன் கால்நடைவளர்ப்பிலும் இந்தப்பிரதேசம் முன்னேறியுள்ளது. பெருமளவு கால்நடைகள் அறுவடையின் பின் அந்த வயல்களில் பெருகி நின்று மேய்வது கண்கொள்ளாக்காட்சி ஆடுகளும் மாடுகளும் வெள்ளாமை செய்யும் காலத்தில் மேற்புறமாக அமையும் மேச்சற்றவைகளில் மேய விடப்படுகின்றன. அதே போல மீன்பிடியும் மீனவர்களுக்கு குத்தகைக்கு விடப்படுகிறது. குளத்தில் நீர் எந்த வகையான தாவரங்களும் இன்றி அமைதியாக சலசலத்து நிற்கிறது. மன்னார் செல்லும் சுற்றுலாப் பயணிகள் இந்தக்குளத்தை பார்க்காமலில்லை. குளங்கள் மண்ணுக்கு வளங்கள் மட்டுமல்ல அவை கண்ணுக்கினிய காட்சிகளையும் அள்ளித்தருகிறது.

# உத்தரவாதங்கள் இல்லாத கடன்கள் இளைஞர்களுக்கான வாய்ப்புக்கள்




சவால்களை எதிர்கொள்வதன் மூலமும், தற்போதுள்ள முன்முயற்சிகளில் இருந்து கற்றுக்கொள்வதன் மூலமும், இலங்கை இளம் வயதினரை வலுவூட்டுவதற்கும், ஆற்றல்மிக்க தொழில் முனைவோர் சுற்றுச் சூழல் அமைப்பை வளர்ப்பதற்கும் உத்தரவாதங்கள் இல்லாத கடன்களை ஒரு சாத்தியமான கருவியாக மாற்ற முடியும்.

இலங்கை அரசாங்கம் பல வழிகளில் இளைஞர்களுக்கான உத்தரவாதங்கள் இல்லாத கடன் திட்டங்களை ஆதரிக்க பெரிய வணிக நிறுவனங்களை (Large Business Centre - LBCs) பின்வருமாறு ஊக்குவிக்க முடியும்:

• வரிச் சலுகைகள்: உத்தரவாதங்கள் இல்லாத இளைஞர் கடன் நிதிகளுக்குப் பங்களிக்கும் டுடீஊகளுக்கான வரி விலக்குகள் அல்லது ஏனைய வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கலாம். இது திட்டத்தை ஆதரிப்பதை நிதி ரீதியாக கவர்ச்சிகரமானதாக மாற்றும்.

• பொருந்தக்கூடிய நிதி மானியங்கள்: டுடீஊகள் பங்களித்த நிதியின் ஒரு பகுதியை அரசாங்கம் பொறுப்பேற்க முடியும், இது அவர்களின் முதலீட்டின் தாக்கத்தை திறம்பட இரட்டிப்பாக்குகின்றது.

• பொது அங்கீகாரம்: விருதுகள் அல்லது பொது அங்கீகாரங்கள் மூலம் திட்டத்தில் தீவிரமாக பங்கேற்கும் LBC களை அங்கீகரித்து கொண்டாடுதல்.

பகிரப்பட்ட நன்மைகளை விளம்பரப்படுத்தல்:

• நீண்ட கால ஆதாயங்களை முன்னிலைப்படுத்தல்: திட்டத்தால் வளர்க்கப்பட்ட திறமையான மற்றும் ஊக்கமளிக்கும் இளம் பணியாளர்களிடமிருந்து டுடீஊ கள் பயனடையலாம். இளைஞர்களின் தொழில்முனைவோருக்கு ஆதரவளிப்பது எதிர்கால திறமைக் குழுவை எவ்வாறு வலுப்படுத்துகின்றது என்பதை அரசாங்கம் வலியுறுத்தலாம்.

• சந்தை அணுகல்: இந்தத் திட்டம் இளம் தொழில்முனைவோரை எல்பிசிகளுடன் சாத்தியமான வாடிக்கையாளர்களாக அல்லது சப்ளையர்களாக இணைத்து, பரஸ்பர நன்மை பயக்கும் கூட்டாண்மைகளை உருவாக்குகின்றது.

•பிராண்ட் இமேஜ் மேம்பாடு: திட்டத்தில் பங்கேற்பதன் மூலம், சமூகப் பொறுப்பு மற்றும் இளைஞர் மேம்பாட்டிற்கான அவர்களின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதன் மூலம் LBCகளின் பொது இமேஜை மேம்படுத்த முடியும்.

**பெரிய வணிக நிறுவனங்களின் ஒத்துழைப்பினை பின்வருமாறு அதிகரிக்கச் செய்யலாம்.**

•நிதியளிப்பு தளத்தை உருவாக்குதல்: இளைஞர் கடன் திட்டங்களுடன் டுடீஊ களை இணைக்கவும் மற்றும் நிதி ஒதுக்கீட்டில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தவும் அரசாங்கம் ஒரு மத்திய தளத்தை நிறுவ முடியும்.

• வழிகாட்டுதல் திட்டங்கள்: கடன் பெறும் இளம் தொழில்முனைவோருக்கு வழிகாட்டல் வாய்ப்புகளை வழங்க டுடீஊகளை ஊக்குவிக்க வேண்டும். இது மதிப்புமிக்க வழிகாட்டுதலை வழங்குவதோடு அவர்களின் முயற்சிகளின் வெற்றி விகிதத்தையும் அதிகரிக்கலாம்.

•திறன் மேம்பாட்டு முன்முயற்சிகள்: இளம் தொழில்முனைவோரின் தேவைகளுக்குப் பொருத்தமான திறன் மேம்பாட்டுப் பட்டறைகள் அல்லது பயிற்சித் திட்டங்களை வழங்குவதற்கு எல்பிசிஃடுடீஊகளுடன் கூட்டாளியாக சேர்த்து திறம்பட செயல்படுத்த முடியும்.

•வெற்றிக் கதைகளை முன்னிலைப்படுத்தவும்: LBCகளை ஊக்குவிக்கவும் மேலும் முதலீட்டை ஈர்க்கவும் திட்டத்தின் மூலம் தொடங்கப்பட்ட


AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

வெற்றிகரமான வணிகங்களைக் முன்னிலைப்படுத்தவும்.

• தரவு உந்துதல் அணுகுமுறை: இளைஞர்களின் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியில் திட்டத்தின் தாக்கத்தை கண்காணித்து இந்தத் தரவை அதன் செயல்திறனைக் காட்ட LBCகளுடன் பகிர்தல் ஒரு சிறந்த முறைமையாகும்.

•அதிகாரத்துவத்தைக் குறைத்தல்: LBCகள் திட்டத்திற்கு பங்களிப்பதற்கான செயல்முறையை நெறிப்படுத்தவும், பங்கேற்பை திறமையாகவும் மேற்கொள்வதற்கு, தொந்தரவில்லாமல் செய்யவும் இலகுவான மற்றும் ஏற்கக்கூடிய செயற்திட்டங்களை அமல்படுத்துதல் வேண்டும்.

இந்த உத்திகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம், இலங்கை அரசாங்கம் எல்பிசிஃ டுடீஊக்கள், இளம் தொழில்முனைவோர் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கும் வெற்றிகரமான சூழ்நிலையை உருவாக்க முடியும். எல்பிசிஃடுடீஊக்கள் திறமையான பணியாளர்களுக்கான அணுகலைப் பெறுகின்றன. அவர்களின் பிராண்ட் இமேஜை மேம்படுத்துகின்றன. மேலும் புதிய வணிகக் கூட்டாளர்களைக் கண்டறிய முடியும். இளம் தொழில்முனைவோர் தங்கள் யோசனைகளை யதார்த்தமாக மாற்றுவதற்குத் தேவையான மூலதனத்தைப் பெறுகிறார்கள். மேலும்

அதிகரித்த கண்டுபிடிப்பு மற்றும் வேலை உருவாக்கத்தால் பொருளாதாரம் பயனடைகின்றது.

**இலங்கையில் வெற்றியைப் வெளிப்படுத்தும் காரணிகள்:**

இலங்கையில் இந்த வேலைத்திட்டத்தின் முழுமையான வெற்றியை கணிப்பது கடினம். ஆனால் கவனமாக திட்டமிடல் மற்றும் செயல்படுத்தல் ஆகியவற்றுடன் அதன் சாத்தியக்கூறுகளுக்கு வலுவான வாதங்கள் உள்ளன. அதன் வெற்றியைப் வெளிப்படுத்தும் காரணிகளின் விபரங்களை பின்வருமாறு பார்க்கலாம்:

•அரசாங்க ஆதரவு: பொருந்தக்கூடிய மானியங்கள், வரிச் சலுகைகள் மற்றும் பொது அங்கீகாரம் ஆகியவற்றின் மூலம் அரசாங்க ஆதரவு LBC பங்கேற்பை கணிசமாக ஊக்குவிக்கும்.

• தற்போதுள்ள சுற்றுச்சூழல் அமைப்பு: இலங்கையின் நிறுவப்பட்ட நுண்கடன்துறையானது இளைஞர்களுக்கு உத்தரவாதங்கள் இல்லாத கடன்களை விரிவுபடுத்துவதற்கான அடித்தளத்தை வழங்குகின்றது.

• பெரிய இளைஞர்கள் மக்கள் தொகை: ஒரு பெரிய மற்றும் ஊக்கமளிக்கும் இளைஞர் மக்கள்தொகை திட்டத்தில் இருந்து பயனடையக்கூடிய எதிர்கால தொழில் முனைவோர்களின் தயாராக குழுவை உருவாக்குகின்றது.

**சமாளிக்க வேண்டிய சவால்கள்:**

•இடர்தவிர்ப்பு: பாரம்பரிய முதலீடுகளுடன் ஒப்பிடும்போது அதிக ஆபத்து இருப்பதாகக் கருதப்படுவதால், உத்தரவாதங்கள் இல்லாத கடன்களில் முதலீடு செய்ய LBCகள் தயங்கலாம்.

•நீண்ட கால ROI: எல்பிசிஃ LBCகளுக்கான முதலீட்டின் மீதான வருமானம் உடனடியாக இருக்காது, பிராண்ட் இமேஜ் மற்றும் எதிர்கால திறமைக் குழு மேம்பாடு போன்ற நீண்ட கால பலன்களை நோக்கிய பார்வையில் மாற்றம் தேவைப்படுகின்றது.

•திட்ட வடிவமைப்பு மற்றும் மேலாண்மை: வெளிப்படைத்தன்மை, சரியான நிதி ஒதுக்கீடு மற்றும் வெற்றிகரமான கடன் வசூல் விகிதங்களை உறுதி செய்ய அரசாங்கம் திட்டத்தை திறம்பட வடிவமைக்க வேண்டும்.

**வெற்றியை பாதிக்கும் காரணிகள்:**

•திட்ட வடிவமைப்பு: தெளிவான தகுதி அளவுகோல்கள், இடர் குறைப்பு உத்திகள் மற்றும் உயர்-சாத்தியமான முயற்சிகளில் கவனம் செலுத்துதல் ஆகியவற்றுடன் நன்கு வடிவமைக்கப்பட்ட திட்டம் LBCகளை ஈர்க்கும்.

• நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு: LBCகளுடன் நம்பிக்கையைப் பேணுவதற்கு வெளிப்படையான அறிக்கையிடல் மற்றும் தரவு சார்ந்த முடிவெடுப்புடன் கூடிய பயனுள்ள நிரல் செயலாக்கம் மிகவும் முக்கியமானது.

•நிதியியல் கல்வியறிவு மற்றும் ஆதரவு: இளம் தொழில்முனைவோருக்கு நிதியியல் கல்வியறிவு திறன்களை வழங்குதல், மற்றும் கடனுக்குப் பிந்தைய ஆதரவு சேவைகளை வழங்குதல் ஆகியவை அவர்களின் வெற்றி விகிதத்தை அதிகரிக்கும். மேலும் திட்டத்தை LBCகளுக்கு மிகவும் கவர்ச்சிகரமானதாக மாற்றும்.

இளைஞர் அபிவிருத்திக் கடன் திட்டம் போன்ற இலங்கையில் தற்போதுள்ள முன்முயற்சிகளுடன் இணைந்து ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வெற்றிகரமான இளைஞர் கடன் திட்டங்களைப் படிப்பது, நிரல் வடிவமைப்பிற்கான மதிப்புமிக்க நுண்ணறிவுகளை வழங்க முடியும்.

ஒட்டுமொத்தமாக, வெற்றிக்கான சாத்தியம் உள்ளது. ஆனால் கவனமாக திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவை முக்கியமானவை. சவால்களை எதிர்கொள்வதன் மூலமும், நம்பிக்கைக்குரிய அம்சங்களை மேம்படுத்துவதன் மூலமும் டுடீஊகள், இளம் தொழில்முனைவோர் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கும் பயனளிக்கும் திட்டத்தை இலங்கை உருவாக்க முடியும்.

இளைஞர்களுக்கான உத்தரவாதங்கள் இல்லாத கடன்கள், இளைஞர்கள் தங்கள் லட்சியங்களைத் தொடர அதிகாரம் அளிக்கக்கூடிய ஒரு நம்பிக்கைக்குரிய வளர்ச்சியாகும். விதிமுறைகளைப் புரிந்துகொள்வதன் மூலமும், கிடைக்கக்கூடிய விருப்பங்களை ஆராய்வதன் மூலமும், வலுவான பயன்பாட்டை உருவாக்குவதன் மூலமும், இளைஞர்கள் தங்கள் கனவுகளை நிஜமாக்க இந்தக் கடன் திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பொறுப்பான கடன் வாங்குதல் மற்றும் நன்கு சிந்திக்கப்பட்ட திட்டம் ஆகியவை இந்த நிதியளிப்பு வாய்ப்பை அதிகம் பயன்படுத்துவதற்கு முக்கியம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இளைஞர்களுக்கான உத்தரவாதங்கள் இல்லாத கடன்களின் முறையானது இலங்கையில் வெற்றிக்கான சாத்தியக் கூறுகளைக் கொண்டுள்ளது, ஆனால் அதன் நம்பகத்தன்மைக்கு கருத்தில் கொள்ள வேண்டிய சில காரணிகள் உள்ளன.


# தமிழர் பொருண்மியத்தில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரிக்க...

## கட்டணவிபரம்

| | கறுப்பு வெள்ளை | வர்ணம் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.10,000/- | ரூ.20,000/- |
| அரைப்பக்கம் | ரூ.6,000/- | ரூ.12,000/- |
| காற்பக்கம் | ரூ.3,500/- | ரூ.8,000/- |
| வரி விளம்பரம் | இலவசம் | இலவசம் |

**தமிழர் பொருண்மியம்,**
**கிறீன் மீடியா ஹவுஸ்,**
**68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.**

**வாட்ஸ் அப் இலக்கம் +94 777 920 384**

# தோல்விகள் தான் வெற்றிக்கான வழிகளை உருவாக்குகிறது. இளம் கண்டுபிடிப்பாளர் மலர்சூடி சுகேதன்

**மரத்தினால்செய்யப்பட்ட உரல் உலக்கையைகொண்டிருப்பதால் விதைகள்ஆட்டப்படும்பொழுது உராய்வுகளால் ஏற்படும் சக்தி இழப்பு இங்கே நடைபெறுவதே இல்லை.**

**தானியங்களில் அல்லது விதைகளில் இருந்து பெறப்ப டுகின்றமுழுபெறுமானத்துடனும் எண்ணை கிடைக்கிறது. அத்தோடு இறக்குமதியாகும் இயந்திரங்களை விட மிகவும் விலை குறைவாகவும் கிடைப்பதால் மக்கள் இதனை விரும்புவதற்கு வாய்ப்புகள் அதிகமாக இருக்கிறது.**

2019 ஆம் ஆண்டு பலராலும் மறக்கப்படாத வடுக்களை தன்னகத்தை கொண்ட வருடம் . கொரோனா... ஆம் இந்த கொரோனா ஆலம் பலருக்கு பிரச்சனைகளையும் இழப்புகளையும் உருவாக்கி இருந்தாலும் இன்னும் பலருக்கு வாய்ப்புகளையும் வல்லமைகளையும் கொடுத்திருக்கிறது.

பிரச்சனைகளிலிருந்து மீண்டும் அந்தப் பிரச்சினைகளை வாய்ப்புகளாகவும் வழிகளாகவும் பயன்படுத்திக்கொண்ட ஒரு இளைஞனின் கதை இது.

பல்வேறுபட்ட தொழில்நுட்ப இயந்திரங்கள் இந்தியா சீனா போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு கொண்டிருக்கிறது . ஆனால் உள்ளூரிலேயே தமக்கு தேவையான ஒரு அருமையான இயந்திரத்தை உருவாக்கி இருக்கிறார் மலர் சூடி சுகேதன்.

யாழ்ப்பாணத்தில் பெயர் போன கொக்குவில்இந்து கல்லூரியின்மாணவனான சுகேதனுக்கு உயர்தரத்தின் பின் பான காலப்பகுதிகள் அவ்வளவு சுமூகமானதாக இருந்திருக்கவில்லை.

குடும்பத்தின்தேவைகளுக்காய் தொழில் மேல் தொழில் என்று ஓடிக்கொண்டே இருக்க வேண்டிய கட்டாயம் இருந்தது .ஆனால் இந்த தொழிலும் சாதகமாக அமையாத பட்சத்தில், யாழ்ப்பாணத்தின் பெயர் போன நகரங்களில் ஒன்றான கொக்குவில் சந்தியில் உணவு கடை ஒன்றினை ஆரம்பித்திருக்கிறார் சுகேதன்.

சிறுவயதிலிருந்தே உணவு உற்பத்திகளில் அதில் நாட்டம் இருந்ததால் அந்த உணவு கடை கொஞ்சம் கொஞ்சமாக அவருக்கு கை கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் 2019 ஆம் ஆண்டு எல்லோருக்கும் ஏற்பட்ட பெரு நஷ்டம் கொரோனா என்ற வடிவத்தில் அவரையும் விட்டு வைக்கவில்லை. கொரோனா காலத்தில் பலரது வியாபாரத்தைப் போலவே சுகேதனது உணவுக்கடையும் மூடவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானது.



எது எப்படி இருந்தாலும் கொரோனா காலம் எல்லோரையும் வீட்டிற்குள் முடக்கி வைத்திருந்த போது,

பொழுதுபோக்காக சுகேதன் கைத்தொலைபேசியில் இயந்திரங்கள் உருவாக்கும் வீடியோக்களை தேடி பார்த்து வந்திருக்கிறார். இயல்பிலேயே துருதுருவென்று ஆர்வம் கொண்ட இவரது மூளை தானும் ஏதாவது ஒன்றை செய்துவிடலாம்என்ற பொறியை அவருக்குள் தட்டி விட்டிருக்கிறது.

ஆனால் ஏற்கனவே பல தொழில்களில் நஷ்டம்அடைந்துகொண்டிருந்த சுகேதனுக்கு புதிதாக ஒன்றை ஆரம்பிக்கும் போது அவ்வளவு வரவேற்பு கிடைத்திருக்கவில்லை. புதிதாக ஒன்றை ஆரம்பிக்க போகிறேன் என்ற போது எல்லோருக்குள்ளும் இருந்த பயம் அவரது குடும்பத்திற்குள் நிச்சயமாக இருந்திருக்கும். சமூகத்திலும் இது வேண்டாத முயற்சி என்று பலர் சொன்னாலும், எல்லாவற்றுக்கும் அப்பால் சுகேதன் உடைய மூளை ஏதோ ஒன்றை திட்டமிட்டு இருந்திருக்கிறது.

தன்னுடைய தேநீர் கடையில் தேங்கியிருந்த பொருட்களை ஒவ்வொன்றாக

விற்று தன்னுடைய முயற்சிக்கான முதல் மூலப் பொருட்களை கொள்வனவு செய்து இருக்கிறார் சுகேதன்.

கொள்வனவு செய்த மூலப்பொருட்களில் இருந்து எண்ணை பிறப்பிக்கும் இயந்திரம் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். ஆரம்பத்தில் உருவாக்கிய இயந்திரத்தில் சின்ன சின்ன கோளாறுகள் இருந்த போதிலும் ,அவற்றை மீள வடிவமைத்து தனக்கு பயன்படும் வகையில் உருவாக்கியதில் ஏற்பட்ட திருப்தி இன்னும் ஒரு இயந்திரத்தை சரியாக உருவாக்கி விட வேண்டும் என்ற உந்து சக்தியை அவருக்குள் கொடுத்திருக்கிறது.

இவரது இயந்திரத்தை கவனித்த பலருக்கு அது வியப்பானதாகவும் விலை குறைந்ததாகவும் தென்பட்டிருக்கிறது அதனால் விசேடமாக தயாரிக்கப்பட்ட இந்த இயந்திரத்துக்கான தேவைகள் உள்ள சிலர் இவரை அணுகி இருக்கிறார்கள்.

ஆனால் சுகேதனிடம் இயந்திரத்தை வடிவமைப்பதற்கான போதிய பண வசதி இருந்திருக்கவில்லை. வாடிக்கையாளர் களிடம் பணத்தை பெற்று இயந்திரத்தை வடிவமைத்து கொடுத்திருக்கிறார். சிறிய லாபத்தோடு நுணுக்கமான மற்றும் பயன் தரக்கூடிய இந்த இயந்திரத்தின் பாவனை பற்றி கேள்வியுற்ற பலர் சுகேதனை நாடி இருக்கிறார்கள். அதுதான் சுகேதனுக்கு கிடைத்த பெரிய வெற்றி.

தன்னைநம்பிஇயந்திரத்தைகொள்வனவு செய்ய முன் வந்திருக்கும் பலருடைய நம்பிக்கைக்கு பாத்திரமாக மிகவும் தரமான இயந்திரத்தை அவர்களுக்கு வழங்கி இருக்கிறார் சகேதன். அவமானப்படுத்திய பலருக்கு முன்பு இன்று நிமிர்ந்து நிற்கும் சுகேதனது தன்னம்பிக்கைக்கு பலனாக வெற்றிகரமாக ஆறு இயந்திரங்களை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார் சுகேதன்.

தற்போது மெல்லமெல்ல அறிமுகமாகிக் கொண்டிருக்கும் சுகேதனிடம்

கேள்வி: இயந்திரத்தை உருவாக்க வேண்டும் என்ற பொறி உங்களுக்கு எப்படி உருவானது ?

பதில்: எங்களுடைய பூர்வீக தோட்டங்கள் தென்னை வளம் மிக்கவை .அவற்றிலிருந்து எண்ணையை வியாபாரம் செய்ய வேண்டும் என்ற ஒரு விருப்பம் எனக்கு இருந்தது .

ஆனால் அதற்கான இயந்திரங்கள் மிகவும் விலை அதிகமாக இருந்ததால் அதனை பற்றி நான் யோசித்துக் கொண்டிருந்தேன்.

அப்போதுதான் கொரோனா காலம் நான் வீட்டில் இருந்தபோது தொலைபேசியில் வீடியோக்களை பார்த்து பொழுது போக்கிக் கொண்டிருக்கிற காலத்தில் தான் இயந்தி ரங்களை உருவாக்கும் வீடியோக்கள் என் கண்களில் பட்டது. அவை இவ்வளவு பயனுடையதாக இருக்கும் என்று அப்போது நான் நினைக்கவில்லை என்கிறார்.

எண்ணெய் உற்பத்தி செய்வதற்காக இயந்திரங்களை கூறிய பொழுது யாரும் இங்கே அவற்றை உற்பத்தி செய்வதாக தெரியவில்லை இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்படும்பொழுது அவற்றின் வரி மற்றும் இதர செலவுகள் அதிகமாக இருந்தது அதனால் யூட்யூபில் நான் கற்றுக் கொண்ட விடயத்தினை அடிப்படையாக வைத்து இந்த இயந்திரத்தை வடிவமைக்க தொடங்கினேன்.

ஆரம்பத்தில் சில சில பிழைகள் காணப்பட்டாலும் தொடர்ச்சியாக முயற்சி செய்து ஒரு இயந்திரத்தை உருவாக்கிய பின்பு அந்த களைப்புகள் அவமானங்கள் எல்லாம் ஒரு பொருட்டாகவே எனக்கு தெரியவில்லை.



இப்போது படிப்படியாக இயந்திரங்களை உருவாக்கும் தொழில்நுட்பத்தை அதிகரித்து வருகிறேன் அவற்றில் வெற்றி பெற வேண்டும் புதிய அந்தஸ்துக்களை பெற வேண்டும் என்பதுதான் எனது விருப்பம் என்கிறார்.

கேள்வி: இயந்திரங்களை உருவாக்குகின்ற பொழுது உங்களுக்கு உதவியாக இருந்தவர்கள் யார்? பணியாளர்களை வேலைக்கு வைத்திருக் கிறீர்களா ?

பதில்:பணியாளர்களை வேலைக்கு வைத்திருக்கக்கூடிய சூழல் இப்போது என்னிடம் இல்லை .ஆனால் என்னுடைய எல்லா சந்தர்ப்பத்திலும் நண்பர்கள் என்னோடு கூட இருந்திருக்கிறார்கள். இயந்திரத்தில் பொருத்தப்பட்டிருக்கும் உரல் உலக்கைகள் மிகவும் அதிக எடை கொண்டவை அவற்றை பொருத்தும் போது

தனி ஒருவராக செய்ய முடியாது அப்போது நான் எனது நண்பர்களை அழைப்பேன் ,அவர்கள் எந்த விதமான மாற்று கருத்துக்களும் இன்றி உடனடியாக எனக்கு உதவி செய்ய வந்து விடுவார்கள் என்று அவர்களை நன்றியோடு நினைவு கூறுகிறார்.

கேள்வி: செய்த தொழிலை இடையில் விட்டு இன்னும் ஒரு புதிய தொழிலை ஆரம்பித்தபோது உங்களுடைய நிதி நிலைமை எப்படி இருந்தது ?

பதில்: ஏற்கனவே பல பொருள்களில் நஷ்டப்பட்டு கொண்டிருந்ததால் அந்த நேரம் எனது நிலையைப்பற்றி சொல்ல வேண்டியது இல்லை . ஏற்கனவே கையில் இருந்த பணங்களும் செலவழிந்து விட்டிருந்ததால் பலரும் என்னை நம்புவதற்கு தயாராக இருக்கவில்லை.

ஆனால் இதனை எப்படியாவது நிறைவேற்றி விட வேண்டும் என்கின்ற அவா எனக்குள் கொஞ்சம் கொஞ்சமாக உருவாகிக் கொண்டே இருந்தது.

ஆரம்பத்தில் எனது இயந்திரத்திற்கான பொருட்களை வாங்குவதற்கு தேநீர் கடையில் இருந்த பொருட்களை ஒவ்வொன்றாக விற்க தொடங்கினேன். அப்படி இருந்தும் பணப்பற்றாக்குறை இருந்து கொண்டே இருந்தது ஆனால் எப்படியாவது ஒரு இயந்திரத்தை உருவாக்கி விட வேண்டும் என்கின்ற எனது கனவு சிறுக சிறுக வளர்ந்து கொண்டே இருந்தது.

அந்த வேகத்தோடு சவால்களுக்கு முகம் கொடுத்து ஒரு இயந்திரத்தை உருவாக்கி முடித்தேன். அந்த இக்கட்டான நேரங்களில் எனது தம்பி மிகவும் உதவியாக இருந்தார்.

அவருக்கு ஏற்கனவே ஒட்டு வேலை தெரிந்ததால் என்னுடைய இயந்திரத்துக்கு தேவையான ஒட்டு வேலைகளை அவரே செய்து கொண்டிருந்தார். ஆனால் துரதிஷ்டவசமாக அவருக்கு ஏற்பட்ட உடல் நலக்குறைபாடு காரணமாக வெளியிடங்களில் ஒட்டு வேலைகளை செய்ய வேண்டிய இருந்தது. அதற்கான செலவும் அதிகமாகவே இருக்கிறது. பணத்தோடு சேர்த்து நேர விரயமும் கூடுதலாக இருக்கின்றது.

ஆனால் இப்போது நான் ஒட்டு வேலையையும் செய்யக்கூடிய அளவுக்கு



என்னை வளர்த்துக் கொண்டிருக்கிறேன் என்பது மகிழ்ச்சி தான் என்கிறார்.

கேள்வி: இந்த இயந்திரத்தை பற்றின அறிமுகத்தை நீங்கள் எவ்வாறு வழங்குகிறீர்கள்?

பதில்: இது எந்த விதைகளை போட்டாலும் எண்ணையை தரக்கூடிய இயந்திரம். இவ்வாறு பலதரப்பட்ட இயந்திரங்கள் சந்தையில் இருந்தாலும் அவை ஒவ்வொன்றும் பிறப்பிக்கப்படும் எண்ணையின் ஊட்டச்சத்துக்களை அழித்து விடுகிறது. இந்த இயந்திரத்தின் விசேடம் என்னவென்றால் மரச்செகில் ஆட்டப்படும் எண்ணையைப் போல மிகவும் சுத்தமாகவும் அதே நேரம் சகல ஊட்டச்சத்துக்களோடும் கிடைக்கின்றது.

மரத்தினால் செய்யப்பட்ட உரல் உலக்கையை கொண்டிருப்பதால் விதைகள் ஆட்டப்படும் பொழுது உராய்வுகளால் ஏற்படும் சக்தி இழப்பு இங்கே நடைபெறுவதே இல்லை.

தானியங்களில் அல்லது விதைகளில் இருந்து பெறப்படுகின்ற முழு பெறுமானத்துடனும் எண்ணை கிடைக்கிறது. அத்தோடு இறக்குமதியாகும் இயந்திரங்களை விட மிகவும் விலை குறைவாகவும் கிடைப்பதால் மக்கள் இதனை விரும்புவதற்கு வாய்ப்புகள் அதிகமாக இருக்கிறது. நாளடைவில் இந்த இயந்திரங்களுக்கான சகல அனுமதிகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறேன் அதற்கான முனைப்போடு செயல்படுகிறேன் என்கிறார்.


உண்மையில் இப்படிப்பட்ட இளைஞர்களை இனம் கண்டு இவர்களது முயற்சிக்கு வலுச் சேர்க்கும் பட்சத்தில்தற் சார்புள்ள ஒரு சமூகமாக நாங்கள் மாறுவதற்கு வாய்ப்புகள் அதிகமாகும் என்று நம்புகிறோம்.

# யாழ்ப்பாண பப்பாசியை யார் காண்பது இனி?


லதா கந்தையா

**இன்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு வீட்டின் கொல்லைப்புறத்திலும் இடம் பிடித்திருந்த பயிர் வகைகள் ஒன்றாக பப்பாசி மரங்கள் காணப்பட்டன. இலங்கைக்கு உரிய பப்பாசி வகைகள் மிகவும் தரம் வாய்ந்தனராகவும் காணப்பட்டன. இன்னொரு விடயம் இலங்கை பப்பாசிகள் சுவைக்கும் தரத்திற்கும் பெயர் பெற்று விளங்கின.**

புதிய புதிய பப்பாசி இடங்களின் வருகை உள்ளூர் பப்பாசிகளின் வீழ்ச்சிக்கு காரணமாயிற்று. மட்டுமின்றி மக்களின் சோம்பேறித்தனமும்நிலத்துண்டாடல்களால் ஏற்பட்ட நிலப்பற்றாக்குறை மற்றும் கைவிடப்பட்டு பராமரிப்பற்ற காணிகளான



நிலை, வெளிநாட்டு சுகபோகமும் சமூக கட்டமைப்பு மாற்றங்களும் இதற்கு பிரதானமான ஒரு காரணமாயிற்று ஆனாலும் பப்பாசி மரங்களை. சாடிகளிலும் உருவாக்கி பயனைப் பெற்றுக் கொள்ளலாம் மாடி தோட்டங்களிலும் வளர்த்து பயன்படுத்திக்கொள்ளலாம் குறுகிய நிலப்பரப்பிலும் இதன் பயனை பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிமிக்கது

உள்ளூர் பப்பாசிகள் பச்சை நிறத்தில், மஞ்சள் நிறத்தில், செம்மஞ்சள் நிறத்தில் காணப்படும். சதைப்பற்றும் கொண்டவை. சில பழங்கள் நீண்டும் சிலபழங்கள் அடிப்பகுதி பெருத்தும் காணப்படும். அவற்றின் வித்துக்கள் கருப்பு நிற மிளகு போன்ற தோற்றத்தில் மேலே நீர் தன்மையான படை போன்ற அமைப்போடு காணப்படும் . பப்பாசி பழங்களின் பப்பாசி கொட்டைகள் (வித்துக்களை பேச்சு வழக்கத்தில் இப்படித்தான் கூறுவர்.) நிறைந்து அடர்த்தியாக காணப்படும் இந்த நீர்த்தன்மையான பப்பாசி வித்துக்களை சிறுவர்கள் கைவிரல்களினாலே நசுக்கி விளையாடுவர். பப்பாசிப்பழம் நோய் எதிர்ப்புச்சக்தி உடையதால் இதன் வித்துக்களை சிறுவர்கள் விளையாடுவது கூட ஆரோக்கியமானதாகவே இருந்தது. ஆனால். தற்கால நவீன பப்பாசி பழங்களில் உள்ளே கொட்டைகள் காண முடியாது இதனால் அவற்றின் மூலம் புதிய தாவரங்களை உருவாக்கிக் கொள்ளவும் முடியாது இந்தச் செயற்பாடு ஒருவகையில் பழங்களிலும் எங்கள் இனத்தை. பாரம்பரிய தன்மைகளை இழந்து விட்ட நிலைக்கு கொண்டு வரும் செயற்பாடாகவே உணர முடிகிறது. நிறைந்த. லாபத்தை தருகிறது என்பதற்காக. கொட்டைகளை பழங்களை உற்பத்தி செய்வதால் என்ன பயன்? உற்பத்திக்கு வித்துக்கள் அவசியமல்லவா? ஏதோ ஒரு திட்ட மடலுக்குள் எமது இனம் வகையாக விழுந்து, தங்கள் இருப்புக்களின் இயல்புகளை இழந்து வருவதை காண முடிகின்றது.

பாமர மக்களுக்கும் மிக மலிவான விலையில் கிடைக்கக்கூடிய பழம் பப்பாசிப்பழம். இந்த பப்பாசி பழம் மெக்சிகோ நாட்டினை பிறப்பிடமாகமாகக் கொண்டதாக கருதப்பட்ட போதிலும் இது ஆப்பிரிக்கா ஆஸ்திரேலியா தென் அமெரிக்கா. இந்தியா இலங்கை என உலகின்பல்வேறு நாடுகளிலும் வளரக்கூடிய இயல்புடையது. அதாவது இடைவெப்ப வலயம் ,மற்றும் வெப்ப வலய பகுதிகளில் செளித்து வளரக்கூடிய தன்மை கொண்டது .

இலங்கை பாசிப்பழங்கள் சுவையிலும் தரத்திலும் பெறுமதி வாய்ந்தவை. வருடத்தின் எந்த மாதத்திலும் காய்த்து கனிதரும் இயல்பு கொண்டவை. சுமார் 20 ஆண்டுகள் உயிர் வாழக்கூடிய வல்லமை கொண்ட இந்த தாவரங்கள் இருவித்திலை தாவரங்களும் ஆகும். அதாவது கிளைகளைக் கொண்டு வளரக்கூடிய தாவரம் ஆகும்.

மஞ்சல் செம்மஞ்சல் பச்சை போன்ற பழங்கள் நிறங்களாக இருந்த போதிலும் இந்த பழங்களில் விட்டமின் ஏ மற்றும் ஊ சத்துக்கள் அதிகம் உள்ளது . 15க்கு மேற்பட்ட. சத்துக்களை இந்த பழம் கொண்டிருக்கின்றது. இந்தப் பழத்தினை உண்பதன் மூலம் கண்பார்வை கூர்மை பெறுகின்றது. இதய ஆரோக்கியத்துக்கும் உகந்தது. நீரழிவை கட்டுப்படுத்துகின்றது. புற்றுநோய் செல்களை அழிக்கும் இயல்பு கொண்டது. தலைமுடி வளர்ச்சிக்கு

தமிழர் பொருணமியம்
வாரமலர்
TAMILS ECONOMY



உதவுகிறது . உடலிலே தோல் பளபளப்பாக வைத்திருக்கவும் உதவுகின்றது பற்களின் பாதுகாப்புக்கும் முரசு கரைதலையும் தடுக்கின்றது .

பப்பாசிப்பழத்தில் அதிகமான சத்துக்கள் காணப்படுவதால் இதனை அதிகமாக சாப்பிடும் போது உடல் வெப்பம். கூடுகின்றது. அதனால் வெப்பகாலத்தில் இதனை அதிகம் என்பதை தவிர்ப்பது அவசியமானது. ஆனாலும் உடல் எடையை குறைக்க விரும்புவோர் இந்த பழத்தினை ஒருவேளை உணவாக உண்பதன் மூலம் உடல் எடையை குறைக்க முடியும் என பழத்தை உண்டு பயனடைந்தோர் கூறுகின்றார்கள். வயிறு உப்புசம். மலச்சிக்கல் உடையவர்கள் இந்த பழத்தினை உள்ளெடுக்கும் போது ஆரோக்கியமான விளைவுகளை அனுபவிக்க முடியும் எனவும் கூறப்படுகின்றது.

இந்த பழத்திலே விட்டமின் ஊ அதிகம் இருப்பதால் சிறுநீரக நோய் உடையவர்கள் இதனை தவிர்க்க வேண்டும். இது ஒரு சூடான பழமாக இருப்பதால் குளிர்காலத்திலே இந்த பலத்தினை சாப்பிட்டால் உடலுக்கு தேவையான வெப்பத்தை இது பெற்று தரும். மட்டுமன்றி இளமையாகவும் குளிர் காலத்தில் தேங்கும் கொழுப்புக்களையும் கரைத்து அழகிலே புது பொலிவையும், இளமையின் தோற்றத்தையும் கொடுக்கும் தன்மை கொண்டது.

நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் கொண்டதால் மழைக்காலத்தில் ஏற்படும் தடிமன் இருமல் புறத் தொற்றுக்களை கட்டுப்படுத்தும் இயல்பும் இந்த படத்திற்கு உண்டு. அத்தோடு மழைக்காலத்தில் அடிக்கடி பசியை தூண்டி நொறுக்கு தீமையை உண்ணும் பழக்கத்தினையும் இது கட்டுப்படுத்தும். அத்தோடு பப்பாசிக்காயை அல்லது பப்பாசிச்சாற்றை அருந்தும் போது குடலிலே உள்ள வட்ட புழுக்கள் வெளியேறிவிடுகிறது

மாதவிலக்கு ஒழுங்கு அற்றவர்கள் ஒழுங்காக அந்த மாதவிலக்கு ஏற்படுவதற்கு இந்த பழதினை சாப்பிடுவதால் சீரான மாதவிடாய் ஒழுங்கைப் பெறலாம்.. முக்கியமான விடையம் ஒன்று இதனை கருத்தரித்த தாய்மார்கள் உண்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் நான் ஏற்கனவே இங்கு குறிபிட்டு இருக்கின்றேன் 15 வகைக்கு மேற்பட்ட சத்துக்களை இந்த பப்பாசி பழம் கொண்டிருப்பதனால் அதிக வெப்பத்தை ஏற்படுத்தும் என. அந்த வெப்பத்தின் விளைவாக கருச்சிதைவு ஏற்பட்டுவிடும் ஆதனால் கருவுறு தரித்த தாய்மார்கள் இந்த படத்தினை சாப்பிடுவதை தவித்துக் கொள்ள வேண்டும். மருத்துவ பரிந்துரையோடு அளவாக உண்ண வேண்டும். மட்டுமின்றி மாதவிடாய் காலத்தில் அதிகமாக உதிரப்போக்குடைய பெண்கள் இந்த பழத்தினை சாப்பிடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

பப்பாசி பழங்கள் மட்டுமின்றி காய்கள் மட்டுமின்றி அதன் இலைகள் கூட பெருமதி வாய்ந்த மருத்துவக்குணங்களை கொண்டு காணப்படுகின்றது. இதன் மரத்தின் இலைச்சாறுகளை அவித்து டெங்கு நோய் தாக்கத்துக்கு உட்பட்ட ஒருவர் அதன் சாற்றை குடிக்கும் போது அந்த சாற்டின் மருத்துவ குணங்கள் காரணமாக டெங்கு நோய் குணமாவதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. மரத்தின் தண்டிலே புட்டவிக்கும் புட்டுக்குழலையும் செய்து எமது முன்னோர் பயன்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு ஆரோக்கியமான மருத்துவ குணங்கள் கொண்ட மரமாகவும் ஆரோக்கியமான உணவுப் பழமாகவும் ஆரோக்கியமான வகையில் பசியை கட்டுப்படுத்தக்கூடிய வகையிலும் மனிதனுக்கு நீண்டநாளுக்குரிய வாழ்தலுக்கான சத்துக்களையும் கொண்டு ஒரு ஆரோக்கியமான பலன் தரும் மரமாகவும் இந்த மரம் காணப்படுகின்றது. அதாவது ஒரு பஞ்சகால நிவாரணியாகவும் இது விளங்குகின்றது. அதனால் தான் அது திட்டமிட்ட வகையிலே மறைமுக யுக்தியோடு அழிக்கைப்படுகின்றது.

இவ்வாறான ஒரு வகைப்பாட்டுக்குள் சிந்திக்கும் போது தான். எதிர்காலத்தில் ஏற்படப்போகும் இனி ஒரு விதமான பொருளாதார நெருக்கடியாக இருந்தாலும் சரி அல்லது விட்டால் ஏற்பட போகும் உணவு தட்டுப்பாடு ஆகியவற்றுக்கு முகம் கொடுக்க எமது எதிர்கால சந்ததிக்கு நாம் எதை விட்டுச் செல்லப் போகிறோம் என்ற கேள்வியே இங்கு பிரதானமாக எழுகின்றது. ஆரோக்கியமான உணவு பழக்கங்களை கைவிட்டு ஆரோக்கியமான பழங்களை கைவிட்டு பூர்வீகமாக எங்களோடு ஒட்டி உறவாடி வந்த பல மரங்களை செடிகளை கொடிகளை கைவிட்டு வெளிநாட்டவர்களின் உற்பத்தி பொருட்களான கோதுமை தானிய உணவுகளான பாண் கேக் என ஒரு சந்ததி அடிமையானது. இப்போது அடுத்த சந்ததி பீட்சா பர்கர் என துரித உணவுக்கு அடிமையாகிறது.

யாழ்ப்பான மண்ணில் தான் அதிகம் அதிகமாக மேலைநாட்டு உணவுகள் புதிய புதிய வடிவங்களோடு அறிமுகமாகிறது. புதிய புதிய விளம்பரங்களோடு மேடைகிறது. அதனை எம்மவர்களே விற்பனையும் செய்கிறார்கள். நுகர்கிறார்கள். இங்கு திடுக்கிடும் செய்தி என்னவெனில் நாளாந்தம் ஒரு பழமாவது உண்ட எமது பரம்பரை இப்போது வாரத்தில் கூட, உயிர் உள்ள பழங்களை உண்பதை தவிர்த்து வருவதாகும். நாங்கள் பூர்வீகங்களை கொஞ்சம் கொஞ்சமாக அல்ல, எமது பூர்வீகங்களை மிக வேகமாகவே இழந்து கொண்டு வருகின்றோம். சிந்திப்போம். மீண்டும் ஒருமுறை வலியுறுத்திச் செல்கின்றேன் பப்பாசி மரங்களை சாடிகளிலும் நடலாம். வீட்டுத்தோட்டமாகவும் மாடிகளிலும் நடலாம். ஒரு குறுகிய நிலப்பரப்புகீள் வளரக்கூடியது இனியாவது சற்று மனம் கொண்டு உள்ளூர் பப்பாசி இனங்களை. பாதுகாப்போம். எங்கள் பூர்வீக சொத்துக்களான மரஞ்செடி கொடிகளை பாதுகாப்போம். அவை நாம் எமது சந்ததிக்கு பரிசளிக்கும் மிகப்பெரிய சொத்துக்கள் அடையாளங்கள்.

# கை கொடுக்கும் கைத்தொழில்

உ. பிருந்தகா

**அபிவிருத்தி அடைந்து வரும் நிலையில் கைத் தொழில் உற்பத்தியும் ஒரு முக்கிய பங்கு விக்கின்றது. எனவே உள்நாட்டில் செய்யப்படும் கைத்தொழல் பொருட்களை அந்நாட்டு மக்களும் வாங்குமிடத்து கைத் தொழில் மேலும் வளர்ச்சி அடைவதோடு அது மீண்டும் வீழ்ச்சி அடையாது பாதுகாக்க முடியும்**



“கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள். கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்” என்கின்ற முன்னோர் மொழி, இன்றும் கைகளால் புனையும் கைவினை கலைஞர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். பொறுமை, கற்பனை, முதலீடு, நேரம் என இவற்றை சார்ந்து உருவாக்கப்படும் இவ்வகை கலைப் பொருட்களுக்கு தொழில் ரீதியாகவும் நல்ல வரவேற்பு உள்ளது.



எளிய மூலப் பொருட்களைக் கொண்டு, ஒருவரின் செயற் திறனை ஆதாரமாகக் கொண்டு ஆக்கப்படும் பொருட்களை கைத்தொழில் உற்பத்திகள் எனலாம். கைத்தொழல் கிராமப் பொருளாதாரத்தில் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது.

நமது நாட்டில் கிராமங்களே பலவாக உள்ளன. கிராமங்களில் பெரும்பாலானோர் விவசாயத் தொழிலையே செய்கின்றனர். இவர்கள் விளைபொருட்களை நேரடியாக மக்களிடம் கொண்டு செல்லாது முகவரிடம் குறைந்த விலையில் விற்பனை செய்கின்றனர். அதனைப் பெற்ற முகவர் இலாப நோக்கத்தில் அதிக விலையில் மக்களிடம் விற்பனை செய்கின்றனர். இதனால் மக்களும் விவசாயிகளும் பாதிப்படைகின்றனர். மற்றும் கிராமங்களில் வசிக்கும் பலர் மட்பாண்டங்கள் செய்தல், எண்ணெய் எடுத்தல், உணவுத்தொழிலுக்குத் தேவையான சில கருவிகளைச் செய்தல், நெரவுத்தொழில், பாய் பின்னுதல், கூடை முடைதல், ஆடு, மாடு, கோழி வளர்த்தல் போன்ற பலவகைக் கைத்தொழில்களை செய்கின்றனர். தமது வருவாயை கருதி காட்டுப் பகுதிகளில் உள்ளவர்கள் தேன் எடுத்தல், மரத் தளபாடங்கள் செய்தல் போன்ற தொழில்களைச் செய்கின்றனர்.

கைவினை வேலைகளை செய்வது மனதை ஒருமுகப்படுத்தும் ஒரு செயற்பாடு. நமது முன்னோர்கள் கூடைகளை முடைந்தும், பாய் பின்னியும் மனதை ஒருமுகப்படுத்தினார்கள். தங்கள் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை தாங்களே தயாரித்தார்கள். நாம் இப்போது தொழில் நுட்பங்களின் துணையோடு வாழ்கின்றோம். நாம் எதையும் உருவாக்கத் தேவையில்லை என்ற நிலையில் வாழ்கின்றோம். ஆனால் பழங் காலத்தில் கைத்தறியை பெண்கள் அதிகமாக செய்தனர். தற்காலத்தில் கைத்தறியை உயிரூட்டும் ஒரு தொழிலாக பார்ப்பதற்குப் போதுமான நிலை இல்லை. அதை நம்முடைய முக்கிய தொழிலாக மாற்றுவதோடு நம்முடைய எதிர்கால சந்ததியினருக்கு அதனைப் பற்றி தெரிந்து பயனடையக் கூடியவாறு மாற்ற வேண்டும்.


கைத்தொழில் வடிவமைப்பு பொருட்களை கவர்ச்சிகரமாக்குகிறது. அதனால் அதன் பெறுமதி அதிகரிக்கின்றது.











அவை கைத்தொழில், கைப்பணிப் பொருட்கள் பரவலாக விரிவடைவதை ஊக்குவிப்பதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்கின்றது. மற்றும் அதிக தொழில் வாய்ப்புகளை உருவாக்குகிறது. "கைத்தொழிலைக் கற்றிருந்தால் வாழ்க்கையில் கவலை இல்லை" என்பது பழமொழி. கற்பனைத் திறனையும் கைத்தொழிலாக மாற்றிக் கொண்டால், வாழ்க்கையில் வெற்றி வெகு தூரத்தில் இல்லை என கிராம மக்கள் உணர்த்தி வருகின்றனர். இவர்கள் வித்தியாசமாகவும், குறைந்த விலையிலும் விதவிதமான பொருட்களில் அணிகலன்களை தயாரித்து விற்பனை செய்கின்றனர். இவ் விற்பனைப் பொருட்களுக்கு பெண்கள் மத்தியில் அதிக வரவேற்பு உள்ளது.

காலப்போக்கில் கிராப்ட் என்கின்ற கைவினைப் பொருட்களை உருவாக்கு தற்கென புனையப்பட்ட மினி கருவிகள், சந்தையில் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. கிளிஞ்சல்கள், ஐஸ்குச்சி, வண்ணக் காகிதங்கள், ரிபன், கிளே, மணிகள், துண்டுக் கண்ணாடிகள், தெர்மக்கோல், குளுஸ்ரிக், ஊசி, கோல்டன், பிளாஸ்ரிக் பூக்கள் என பல வித்தியாசமான பொருட்கள் இந்த கைவினை கலைப் பொருட்களை உருவாக்குவதில் இடம் பிடித்திருக்கின்றன. வீட்டிலிருக்கும் பெண்கள் தங்கள் நேரத்தைப் பயனுற செலவழிக்க இது ஒரு நல்ல தொழில் மாத்திரம் அல்ல. தங்களின் திறமைகளை வெளிப்படுத்தக் கூடிய விதத்தில் அமையும் உத்தியும் கூட. இந்த வகையில் பூந்தொட்டிகள், பலவிதமான பரிசுப் பொருட்கள், அலங்கார தோரணம், ஆபரணங்கள், தலையணை ஆகிய வடிவங்களை உருவாக்குவதில் கைதேர்ந்த திறமைசாலிகளாகக் கூட சிறந்து விளங்குகின்றனர்.

இன்றைய காலத்தில் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களின் விற்பனை அதிகரித்த வண்ணம் உள்ளதைக் காண முடிகின்றது. அதாவது கைத்தொழிலாளர்கள் இணையம் மற்றும் சமூகவலைத் தளங்களைப் பயன்படுத்தி தம் உற்பத்திப் பொருட்களை இலவசமாக விளம்பரப்படுத்தி விற்பனை செய்யக் கூடியதாக உள்ளது. அதேசமயம் இடைத் தரகர் மூலம் பொருட்களை விற்பனை செய்யாது, நேரடியாக விற்பனை செய்வதால், முழு இலாபத்தையும் ஈட்டிக் கொள்ள முடிகின்றது. அதேபோல வாடிக்கையாளர்களும் வீட்டிலிருந்தே தமக்குத் தேவையான பொருட்களை பெற்றுக் கொள்ளக் கூடிய வசதிகள் காணப்படுகின்றது.

இக் கைத்தொழில் மூலம் பலர் பயன டைந்தாலும் கூட, இணையவழி விற்பனை யில் வாடிக்கையாளர்கள் ஏமாறக்கூடிய சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. அதாவது ஒரு சிலரின் பண மோகம் காரணமாக தரமற்ற பொருட்களை விற்பனை செய்வதனால், ஒழுங்கான முறையில் தரமான கைத்தொழில் பொருட்களை விற்பனை செய்யும் வாடிக்கையாளர்களுக்கும் அவப்பெயர் கிடைக்கப் பெறும் நிலைமை காணப்படுகின்றது.

தொழில் நுட்ப மாற்றம் கைத்தொழில் செய்பவர்களுக்கு வாய்ப்பாகக் காணப்பட் டாலும், பலவிதமாக சிந்திக்கும் போது அதுவே அச்சுறுத்தலாகவும் காணப்படுகின்றது. தற்போதைய காலகட்டத்தில் உள்நாட்டு கைத்தொழில் உற்பத்தியாளர்களுக்கு நிலைமை சாதகமாகவே காணப்படுகின்றது. அதாவது வெளிநாட்டுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படாத காரணத்தினால் உள்நாட்டுக் கைத்தொழில் விற்பனை அதிகரித்ததை கண்கூடாகவே காண முடிகின்றது. மற்றும் சிறு கைத்தொழில் முயற்சியாளர்களும் கூட தமது உற்பத்தி மற்றும் திறன்களை அதிகரிக்கக்கூடிய நிலை காணப்படுகின்றது.

முக்கிய இடத்தை வகிக்கும் ஆடைக் கைத்தொழிலானது மாவத்தகமை, பொல்காவலை, மீரிகமை, கட்டுநாயக்க, பியகம, கொறணை, சீதாவாக்கை, கொக்கலை, மல்வத்தை, வத்துபிடிவெல, கண்டி போன்ற வலயங்களில் அதிகளவு நடைபெறுகின்றது. நம் நாட்டில் ஆடைகள் உற்பத்தி தரமானதாகக் காணப்படுவதால், வெளிநாடுகளில் நம் ஆடை உற்பத்திக்கு கேள்வி அதிகமாக உள்ளது. இதனால் ஆடை ஏற்றுமதி மூலம் நமது நாடு சிறந்த வருவாயை ஈட்டிக் கொள்ள முடிகின்றது. இவ் ஆடை உற்பத்தி மூலம் தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கின்ற நிலை காணப்படுகின்றது.

நம் நாட்டு பேரளவு, இடைநிலை, சிற்றளவு போன்றவற்றை அக்காலம் தொடக்கம் இக்காலம் வரையிலும் பேணிப் பாதுகாத்துள்ளனர். அபிவிருத்தி அடைந்து வரும் நிலையில் கைத்தொழில் உற்பத்தியும் ஒரு முக்கிய பங்கு விக்கின்றது. எனவே உள்நாட்டில் செய்யப்படும் கைத்தொழல் பொருட்களை அந்நாட்டு மக்களும் வாங்குமிடத்து கைத் தொழில் மேலும் வளர்ச்சி அடைவதோடு அது மீண்டும் வீழ்ச்சி அடையாது பாதுகாக்க முடியும்.

# சிறுதானியங்கள்

**உலகின் பல நாடுகளில் பிரதான உணவாகக் இருக்கும் அரிசியில் கூட சத்துக்கள் குறைவாக உள்ளன. ஆனால் சிறுதானியங்கள் உடலுக்குத் தேவையான அனைத்து சத்துகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. சிறுதானியங்களை நாம் உணவாக எடுத்துகொள்ளும் போது நம் உடலின் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கிறது. இதனால் உடலில் இருக்கும் கெட்ட கொழுப்புகள் குறைக்கப் பட்டு உடல் பருமன் மற்றும் இருதய நோய்கள் ஏற்படுவது தடுக்கப்படுகிறது**



பூரணி

ஆதி காலத்தில் மனிதன் முதன் முதலில் அரிசியை மூங்கில் மரத்திலிருந்து தான் கண்டுபிடித்தான். எனவே அதற்கு மூங்கிலரிசி என்று பெயரிட்டான். இதன் மூலம் நெற்பயிரைக் கண்டு பிடித்து அதற்குப் பல பெயர்களை சூட்டினான். பின்பு சிறுதானிய வகைகளையும் பயிறு வகைகளையும் ஒவ்வொன்றாக கண்டு பிடித்தான். சிறுதானியங்களை நவதானியங்கள் என்றும் அழைக்கப்படுகிறது.

### சிறுதானிய பயன்கள்

நம் முன்னோர்களால் அந்த காலத்தில் இருந்தே சாப்பிடப்பட்டு வந்த ஆரோக்கியமான உணவுகளில் முதல் இடத்தை பிடிப்பது சிறுதானியங்கள் தான். ஆதிகாலத்தில் தொடங்கி இன்று நாம் வாழும் நவீன காலம் வரை மனித இனம் பயன்படுத்தும் உணவு வகைகளில் சிறுதானியங்கள் முக்கிய இடம் வகிக்கிறது. சிறுதானியங்கள் நம் பாரம்பரிய உணவு முறைகளின் ராஜாவாக கருதப்படுகிறது. இன்று நாம் சாப்பிடும் அரிசி சிறுதானியங்களின் வழிமரபு தான். இவை நெல்லை போன்றே வளர்க்கப்படும் தானிய வகையாகும்.

### குறுகிய காலப் பயிர்

அரிசியின் அளவை விட சிறியதாக இருக்கும் சிறுதானியங்கள் குறுகிய காலப் பயிராகும். நெல் விளைவதற்கு அதிக நாட்கள் மற்றும் மழை தேவைப்படும். ஆனால் சிறுதானியங்கள் மிதமான தட்ப வெப்ப நிலையிலும், குறைவான நீர் வசதியிலும், மற்றும் சாதாரண மண் வளத்திலும் நன்கு செழித்து வளரும். சிறுதானியங்களில் பெரும்பாலானவை பயிரிடப்பட்டு மிக குறுகிய காலத்தில் அதாவது 65 நாட்களுக்குள் அறுவடைக்கு வந்துவிடும்.

### ஊட்டச்சத்தின் களஞ்சியம் சிறுதானியங்கள்

உலகின் பல நாடுகளில் பிரதான உணவாகக் இருக்கும் அரிசியில் கூட சத்துக்கள் குறைவாக உள்ளன. ஆனால் சிறுதானியங்கள் உடலுக்குத் தேவையான அனைத்து சத்துகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. சிறுதானியங்களை நாம் உணவாக எடுத்துகொள்ளும் போது நம் உடலின் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கிறது. இதனால் உடலில் இருக்கும் கெட்ட கொழுப்புகள் குறைக்கப் பட்டு உடல் பருமன் மற்றும் இருதய நோய்கள் ஏற்படுவது தடுக்கப்படுகிறது.

### சிறுதானியங்களின் வகைகள்

சிறுதானிய வகைகள்

1. குதிரைவாலி
2. கேழ்வரகு
3. தினை
4. வரகு
5. சாமை
6. கம்பு
7. பனிவரகு
8. சோளம்

ஒவ்வொன்றையும் பற்றி விரிவாக தெரிந்து கொள்ள அவற்றை கிளிக் செய்யவும்.

சிறுதானியங்கள் சாப்பிடுவதால் ஏற்படும் பயன்கள் ஊட்டச்சத்துக்கள் நிறைந்தது

உடல் சரியாக இயங்குவதற்கு தேவையான பலவகையான ஊட்டச்சத்துக்கள் சிறுதானியங்களில் நிறைந்துள்ளன. இரத்த அணுக்களின் உற்பத்தி மற்றும் இரத்த ஆக்ஸிஜனேற்றத்தை அதிகரிக்கும் இரும்புச்சத்து மற்றும் செம்பு ஆகியவை அதிக அளவில் சிறுதானியங்களில் உள்ளன. மேலும் சிறுதானியங்களில் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்த உதவும் பாஸ்பரஸ் உள்ளது. சிறுதானியங்களில் அதிக அளவு உள்ள இரும்புச்சத்து இரத்தசோகையைக் குணப்படுத்தும். சிறுதானியங்களில் உள்ள கால்சியம் எலும்புகளை வலுவடையச் செய்கிறது.

புற்றுநோய் அபாயத்தைக் குறைக்கிறது

சிறுதானியங்களில் நார்ச்சத்து மற்றும் தாவர ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளன, இவை கோலான் புற்றுநோய் வளரும் அபாயத்தைக் குறைக்கிறது. லிக்னைன் எனப்படும் சிறு தானியங்களில் உள்ள தாவர ஊட்டச்சத்தானது பாலூட்டிகளின் குடலில் உள்ள லிக்னைனாக மாறுகிறது. இவ்வாறு மாறும் லிக்னைன் மார்பகப் புற்றுநோயிலிருந்து பாதுகாக்க உதவுகிறது. மேலும் மார்பகப் புற்றுநோய் ஏற்படும் அபாயத்தையும் 50% குறைக்கிறது.

தமனி கோளாறுகளைத் தடுக்கிறது



சிறுதானியங்கள் உடலில் உள்ள டிரைகிளிசரைடுகளின் அளவை குறைக்கிறது. சிறுதானியங்கள் இரத்தத் அணுக்கள் தடிமன் ஆவதைத் தடுத்து, இரத்தத்தை திரவ நிலையிலேயே வைத்துக் கொள்ள உதவுகிறது. இதனால் வாதம், தமனி கோளாறுகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு பெருமளவில் குறைகிறது.

வைட்டமின் 'பி' நிறைந்தது

சிறுதானியங்களில் உள்ள வைட்டமின் 'பி' ஆனது கார்போஹைட்ரேட்டுகள் மற்றும் கொழுப்பினைத் கிரகித்து அதனை ஆற்றலாக மாற்றுகிறது. வைட்டமின் 'பி' இரத்தத்தில் உள்ள ஹோமோசைஸ்டீன் அளவைக் குறைக்கிறது. இதனால் கொழுப்புகள் ஒன்று சேர்ந்து கட்டியாக மாறுவதும், கொழுப்புகள் உடலிலேயே தங்குவதும் தடுக்கப்படுகிறது.

எடையை குறைக்கும்

சிறுதானியங்கள் டிரிப்டோபான் எனப்படும் அமினோ அமிலத்தைக் கொண்டுள்ளது. இந்த அமினோ அமிலம் பசியின்மையைக் குறைத்து சரியான எடையை கட்டுக்குள் வைக்க உதவுகிறது. டிரிப்டோபான் உணவு செரிமானத்தை உடலில் மெதுவான வேகத்தில் நடத்துகிறது. சிறுதானியங்களில் நார்ச்சத்து மிகுதியாக உள்ளதால் அடிக்கடி பசி ஏற்படுவதை தடுத்து அதிகமாக சாப்பிடுவதையும் தடுக்கிறது. இதனால் உடல் எடையை குறைக்க விரும்புபவர்கள் ஒரு நாளைக்கு ஒரு வேளை வீதம் தங்கள் உணவில் சிறுதானியங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

## சிறுதானியங்களின் மருத்துவ நன்மைகள்

### பசையம் அறவே இல்லை

காய்கறிகளை மட்டும் உண்ணும் சைவப் பிரியர்கள் மிகவும் விரும்பும் உணவு சிறுதானியங்களாகும். ஏனெனில் சிறுதானியங்களில் உள்ள அதிகப்படியான புரதச்சத்து தான் இதற்கு காரணம். தினமும் உடலுக்கு தேவைப்படும் புரதச்சத்தின் அளவு இறைச்சி உணவுகளை விட சிறுதானியங்களில் அதிகமுள்ளது. இறைச்சி உணவுகளில் உள்ள நிறைவுற்ற கொழுப்பு மற்றும் பிற ஆரோக்கியமில்லா பொருட்கள் சிறுதானியங்களில் இல்லை. சிறுதானியங்களில் இருக்கும் புரதக் கூட்டமைப்பு கோதுமையில் உள்ளது போன்றே இருக்கிறது. அதிகச் சத்துக்கள் உள்ள சிறுதானியங்களில் பசையம் (குளுட்டன் - Gluten) எனப்படும் ஒட்டும் தன்மை கொண்ட பசை போன்ற பொருள் இல்லை. பசையம் சிறுதானியங்களில் இல்லாத காரணத்தால் செரிமானத் தன்மையை அதிகரிக்கிறது.

பசையம் ஒவ்வாமை நோயைத் தடுக்கும்

பசையம் ஒவ்வாமை நோய் என்பது சிறுகுடலைச் சேதப்படுத்தும் ஒரு வகையான நோய் ஆகும். இந்நோய் ஏற்பட்டால் சிறுகுடல் பாதிக்கப்பட்டு உணவில் இருந்து ஊட்டச்சத்துக்கள் உறிஞ்சப்படுவது தடுக்கப்படுகிறது. சிறுதானியங்களில் முற்றிலுமாகப் பசையம் (குளுட்டன்) என்ற பசையம் கிடையாது. சிறுதானியங்களை ஆரம்பத்திலிருந்தே சாப்பிட்டு வந்தால் இந்த நோய் ஏற்படுவதிலிருந்து நம்மைப் பாதுகாக்கலாம்.

உயர் இரத்த அழுத்தத்தை குறைக்கும்

இதயத்தமனிகளில் உள்ள உட்சுவரினை தளர்த்துவதற்கு சிறுதானியங்களில் உள்ள மெக்னீசியம் பயன்படுகிறது. இவ்வாறு தமனியின் உட்சுவர் தளர்வதனால் உயர் இரத்த அழுத்தம் ஏற்படுவது தடுக்கப்படுகிறது. மேலும் ஆஸ்துமா மற்றும் ஒற்றைத் தலைவலி ஏற்படுவதற்கான அளவை குறைக்கிறது.

### நார்ச்சத்து நிறைந்தது

சிறுதானியங்களில் நார்ச்சத்து மிகுந்துள்ளது. எனவே சிறுதானியங்கள் செரிமானத்தை எளிதாக்க உதவுகிறது. சிறுதானியங்களில் மலமிளக்கி பண்புகள் மலச்சிக்கலுக்குச் சிறந்த தீர்வாக அமைகின்றன. சிறுதானியங்களில் உள்ள லெசித்தின் மற்றும் மீத்தியோனின் கல்லீரலில் இருந்து தேவையற்ற கொழுப்பை வெளியேற்ற உதவுகின்றன.

நார்ச்சத்து அதிகமுள்ள உணவினை சாப்பிடுவதன் மூலம் பித்தப்பையில் கற்கள் உருவாவது தடுக்கப்படுகிறது. சிறுதானியங்கள் எளிதில் கரையாத நார்ச்சத்தை அதிகமாக்குகிறது, மேலும் பித்தப்பையில் கற்கள் உருவாகுவதற்குக் காரணமான பித்த அமிலங்களின் சுரப்பைக் குறைக்கிறது.

தசைகள் சேதமடைவதை குறைக்கிறது

சிறுதானியங்கள் அதிகப் புரதச்சத்து மிகுந்த தானியமாகவும் மற்றும் அமினோ அமிலங்களில் ஒன்றான லைசினையும் கொண்டுள்ளது. இவை இரண்டும் தசைகள் சேதமடைவதை குறைத்து வலிமையான தசைகள் உருவாகுவதற்கு உதவுகிறது. எனவே சிறுதானியங்கள் தசைகளுக்கு மிகவும் ஏற்ற உணவாக இருக்கிறது.

### நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும்

சிறுதானியங்களில் குறைந்த கிளைசிமிக் குறியீடு இருப்பதால் செரிமானம் மெதுவாக நடைபெறுகின்றது. இதனால் இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை கட்டுபாட்டில் வைத்து கொள்ள முடியும். இதனால் டைப்-2 நீரிழிவு எனப்படும் நீரிழிவு நோய் வராமல் தடுக்கிறது.

### நிம்மதியான தூக்கம் தரும்

சிறுதானியங்களில் உள்ள டிரிப்டோபேன் மன அழுத்தத்தைக் குறைக்க உதவும் செரோடோனின் அளவை அதிகப்படுத்துகிறது. சிறுதானியங்களால் செய்யப்படும் கஞ்சியினைத் தினமும் இரவு குடித்து வந்தால் அமைதியான தூக்கத்தினைப் பெற முடியும். தூக்கமின்மை பிரச்சனையால் அவதிபடுபவர்கள் இரவில் சிறுதானியங்களை சாப்பிடலாம்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த சிறுதானியங்களை நாம் உண்டு ஆரோக்கிய வாழ்வை வாழ்வோம்.

# வணிகத்தில் பெண்கள்

**கடந்த காலங்களில் பெண்கள் தொழில் தொடங்குவதற்கான சட்டங்கள் மிகக் கடுமையாகவே இருந்துள்ளன. குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகளில்கூடப் பெண்கள் தொழில் தொடங்க அவர்களது கணவர்களின் கையொப்பம் கட்டாயமாக்கப்பட்டது. பிறகு 1988இல் புதிய சட்டம் இயற்றப்பட்டு பெண்கள் சுதந்திரமாகத் தொழில் தொடங்கவும் மேலும் அரசாங்க ஒப்பந்தங்களில் விண்ணப்பிக்கவும் புதிய சட்டத் திருத்தத்தில் வழிவகை செய்யப்பட்டது.**

ஆரா

பெண்கள் பல துறைகளிலும் இன்று சாதித்துக்கொண்டிருந்தாலும் வணிகத்



துறையில் சாதிப்பது என்பது வரலாறு காலம் தொட்டுப் பெரும் சவாலாகவே உள்ளது. கி.மு.1870களில் வடக்கு இராக்கில் உள்ள அஸ்ஸ/ர் நகரத்தைச் சேர்ந்த அஹாஹா என்ற பெண் அந்த நகரத்தில் இருந்து தொலைதூரத்தில் உள்ள கானேஷ் என்ற நகருடன் வணிகத்தில் ஈடுபட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

அஹாஹா மட்டும் இல்லாமல் அங்கு வாழ்ந்த பல பெண்கள் முதலீட்டாளர்களாக, வங்கியாளர்களாக ,தொழிலதிபர்களாக இருந்ததற்கான சான்று அங்கிருந்து எடுக்கபட்ட கடிதங்கள், ஒப்பந்தங்கள் மூலம் கிடைத்துள்ளன. இவை அனைத்தும் களிமன் பலகைகளில் எழுதப்பட்டிருக்கின்றன. பிரான்ஸ் நாட்டில் ஆராய்ச்சியாளராக இருக்கும் சிசிலி மிச்செல்(CECILE MICHEL) அஸ்ஸீர் நகரப் பெண்கள், வணிகத்தில் ஆண்களுக்கு நிகராக எந்த அளவுக்குப் போராடி வெற்றி கண்டிருக்கிறார்கள் என்பதை (women of Assur and Kanesh ) என்ற புத்தகத்தில் எழுதியுள்ளார்.

அஸ்ஸீர் நகரப் பெண்கள் வணிகத்திலும் குடும்ப நிர்வாகத்திலும் சிறந்து விளங்கியுள்ளனர். மேலும் சந்தை நிலவரங்கள் குறித்தும், தங்களின் தேவைகள் குறித்தும், வியாபாரத்தில் ஈட்டிய பணத்தை முதலீடு செய்வது குறித்தும் நன்கு அறிந்திருந்தனர்.

கடந்த காலங்களில் பெண்கள் தொழில் தொடங்குவதற்கான சட்டங்கள் மிகக் கடுமையாகவே இருந்துள்ளன. குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகளில்கூடப் பெண்கள் தொழில் தொடங்க அவர்களது கணவர்களின் கையொப்பம் கட்டாயமாக்கப்பட்டது. பிறகு 1988இல் புதிய சட்டம் இயற்றப்பட்டு பெண்கள் சுதந்திரமாகத் தொழில் தொடங்கவும் மேலும் அரசாங்க ஒப்பந்தங்களில் விண்ணப்பிக்கவும் புதிய சட்டத்திருத்தத்தில் வழிவகை செய்யப்பட்டது.

1900களின் தொடக்கத்திலேயே அமெரிக்காவின் சி.ஜெ.வாக்கர், கோகோ சானல், ஆலிவ் ஆன் போன்றவர்கள் தங்களுக்கான பிஸினஸையும் பிரான்டையும் உருவாக்கி, தங்களுக்கான பாதையை உருவாக்கிக்கொண்டார்கள். இரண்டாம் உலகப்போரில் பங்கேற்கப் பெரும்பாலான ஆண்கள் ராணுவத்தில் சேர்க்கப்பட்டனர். விவாகரத்துகளும் பொருளாதார நெருக்கடியும் பெண்களுக்குச் சவாலாக இருந்தது. இது போன்ற நிலையில் பெண்கள் வேலைக்குச் செல்ல வேண்டிய சூழலில், சில பெண்கள் சுயமாகத் தொழில் தொடங்க ஆரம்பித்தனர். முதலில் சிறுசிறு தொழிலாகச் செய்த பல பெண்கள் இன்று சாம்ராஜ்ஜியங்களையே உருவாக்கிவிட்டனர். சீனா போன்ற நாடுகள் பல நூற்றாண்டுகளாக ஆணாதிக்க சமுதாயமாக இருந்து, கிங் வம்சத்தின் சீர்திருத்தங்கள், குடியரசுக் கட்சியின் எழுச்சி போன்றவற்றால் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொது செயலாளர் ஜியாங் ஜெமினால் பாலின சமத்துவத்தை அடைந்த நாடாக மாறி, இன்று உலகிலேயே தற்சார்பு கொண்ட பெண் பில்லியனர்களின் பட்டியலில் சீனப் பெண்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

அமெரிக்காவின் வர்த்தகப் பத்திரிகையான போர்ப்ஸ் (Forbes) 2022 உலகப் பணக்காரர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது. இது வருடா வருடம் வெளியிடப்படும் பட்டியல் தான் என்றாலும் இதில் இடம்பெற்றுள்ள பெண் பில்லியனர்களின் எண்ணிக்கை வழக்கம்போல் மிகவும் குறைவாகவே உள்ளது. சுமார் 2668 பேர் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். இதில் பெண்களின் எண்ணிக்கை வெறும் 327 தான். அதிலும் 101 பெண்கள் மட்டுமே சுயசார்புள்ள பெண் பணக்காரர்கள்.

சுயசார்புள்ள பணக்காரப் பெண்கள் பட்டியலில் மொத்தமுள்ள 124 இடங்களில், 78 இடங்களைச் சீனப் பெண்கள் பிடித்துள்ளனர். அமெரிக்கா, லண்டன் போன்ற நாடுகள் அடுத்த அடுத்த இடங்களைப் பிடித்துள்ளன. இந்தியாவில் நூற்றுக்கு ஏழு பெண்கள் மட்டுமே தொழில் துறையில் வெற்றி கண்டுள்ளனர். இந்தியா போன்ற வளரும் நாடுகளில் பெண்களுக்கான வாய்ப்புகள் அதிகளவில் திறக்கப்பட்டிருந்தாலும், பெண்களின் பங்கு மிகக் குறைவாகவே உள்ளது. இதற்கான காரணங்கள் என்ன, எது அவர்களுக்குத் தடையாக உள்ளது, என்ன மாதிரியான சவால்களை அவர்கள்



எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று பார்த்தால், முதலில் வருவது அவர்களது குடும்பப் பொறுப்புகள் தாம்.

இன்று பல குடும்பங்கள் பெண்களுக்கு உறுதுணையாக இருந்தாலும் இங்கு அதிகளவில் முக்கியத்துவம் கொடுத்து கொண்டாடப்படும் அன்னையர் தினம், மகளிர் தினம் போன்றவை பெண்களுக்குத் தங்களது கடமைகளை மறைமுகமாக ஞாபகபடுத்தும் ஒரு யுக்திதான். இன்று பல பெண்கள் இது போன்ற ஓர் உளவியல் சிக்கலைத் தாங்களாகவே உருவாக்கிக்கொண்டு, தங்களது எண்ணங்களையும் முயற்சிகளையும் முடக்கிக்கொள்கின்றனர். படிப்பிற்கும் திருமணத்திற்கும் இடையில் இருக்கும் கால அவகாசம் ஆண்களைப் போல பெண்களுக்குக் கிடைப்பதில்லை. படிப்பை முடித்த கையோடு பெரும்பாலான பெண்கள் ஏதாவது ஒரு நிறுவனத்தில் பணிபுரிய ஆரம்பித்துவிடுகின்றனர்.

மாறாக ஒரு நிறுவனத்தை நிறுவ வேண்டும் என்று தோன்றுவதில்லை. வேலைக்குச் சேர்ந்த ஓரிரு ஆண்டுகளில் திருமணம், அதன் பிறகு குழந்தை என்று அடுத்தடுத்து பொறுப்புகளில் சோர்வாகி, தான் எதை நோக்கிச் சாதிக்க நினைத்தோம் என்பதையே பல பெண்கள் மறந்து விடுகின்றனர்.

இலங்கையைப் போல பிற நாடுகளில் திருமணமும் குழந்தைப்பேறும் பெண்களுக்கு ஒரு சமூக நெருக்கடியாக இருப்பதில்லை. மேலும் நம் பெண்கள் பெரிய அளவிலான முதலீடுகளில் ஈடுபடுவதும் சற்றுச் சவாலான விஷயமாகவே உள்ளது. இது போன்ற பெரிய முதலீட்டு வணிகத்தில் பொருளாதாரத்தில் ஏற்படும் நிச்சயமற்ற தன்மைகளை எதிர்கொள்ள விரும்புவதில்லை. இதனாலயே குறைந்த முதலீட்டில் நடக்கும் தொழில்களோடு பல பெண்கள் திருப்தி அடைந்துவிடுகின்றனர்.



மேலும் இங்கு பெரும்பான்மை பெண்களுக்கு அவர்களின் பெயரில் சொத்துகள் வாங்கப்படுவதில்லை. இதனால் தொழில் தொடங்க வங்கியில் கடன்பெறுவதற்கான உத்திரவாதமாக (collateral) வைக்க இவர்கள் திணற வேண்டியுள்ளது. நியுயார்க்கின் புளூம்பர்க் (Bloomberg) நிறுவனத்தின் ஆய்வில் பெண்கள் நடத்தும் நிறுவனங்களுக்குக் கிடைக்கும் நிதியுதவியைவிட ஆண்கள் தலைமை ஏற்று நடத்தும் நிறுவனங்களுக்கு அதிகளவில் கிடைப்பதாகத் தெரிவித்துள்ளது. ஆனால், இந்த நெருக்கடிகளை எல்லாம் தாண்டித்தான் நைகா (Nyka)வின் நிறுவனர் ஃபல்குனி நாயர், சோகோ(Zoho)வின் ராதா வேம்பு, பயோகானின் கிரன் மசும்தார் போன்றவர்கள் சாதனை பெண்களாகத் தடம் பதித்துள்ளனர்.

## றப்பர் பாலில் விழுந்து மறைந்த கண்ணீர் - 07

# இரு நூற்றாண்டு கால றப்பர் தோட்ட தொழிலாளர்களின் சோகக் கதை

சங்கா சிங்ஹ ஆரச்சி

1970ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் அதுவரை பிரித்தானியர்களிடமிருந்த முன்னணி தேயிலை, றப்பர் மற்றும் தென்னந்தோட்டங்கள் 'மக்கள் மயப்படுத்தலின் கீழ் அரசுடைமை யாக்கப்பட்டது.

மலையக பெருந்தோட்ட அபிவிருத்தி சங்கம் (ஜனவசம), அரச பெருந்தோட்ட தினைக்களங்கள் மற்றும் மலையக பெருந்தோட்ட அபிவிருத்தி சங்கம் (உசவசம) போன்ற அரச நிறுவனங்களை அமைத்து அதனூடாக தோட்டங்கள் நிர்வகிக்கப்பட்டன. அரசுக்கு நெருக்கமானவர்களைக் கொண்டிருந்த இந்நிறுவனங்களினூடாக மக்கள் மயப்படுத்தல் காரணமாக தோட்டத் தொழிலாளர்களுக்கு நன்மை விளைந்தது.



தேயிலை, றப்பர், தென்னந் தோட்ட தொழிலாளர்கள் நாட்சம்பளத்திற்கு பதிலாக தொழிலாளர்கள் கூட்டாக மாதச் சம்பளத்தை வழங்குமாறு கோரியிருந்தனர். ஆனால் தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்க தலைவரும், இடதுசாரி முன்னணி தலைவர்களில் ஒருவரான ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பெருந்தோட்ட துறை அமைச்சரான கொல்வின் ஆர் டி சில்வாவினால் அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

உலகில் எந்தவொரு நாட்டிலும் தோட்ட தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் வழங்கப்படுவதில்லையென தெரிவித்துள்ளாரென தான் எழுதிய தோட்ட மக்களின் வரலாறு என்ற நூலில் கம்யூனிஸ தொழிறசங்க தலைவரான எஸ்.நடேசன் தெரிவித்துள்ளார். தோட்டங்கள் மக்கள் மயப்படுத்தல் காரணமாக அதுவரை லயன் காம்பராக்களுக்கும் தோட்டங்களுக்கும் கம்யூனிஸ தலைவர்களுக்கு உள் நுழைவதற்கு அதுவரை காலம் இருந்த சில தடைகள் நீக்கப்பட்டிருந்தாலும் வீடு மற்றும் காணி தொடர்பான பிரச்சினைகள் தொடர்ச்சியாக இருந்து கொண்டேயிருந்தன. அதுவரை காலம் நிறுவனங்களிற்கு கீழ் இருந்த 300 தோட்ட பாடசாலைகள் இலவசக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டு ஒரு தசாப்த காலத்தின் பின்னரே கல்வி அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டன.

அப்போதிருந்த பலம்பொருந்திய தொழிற்சங்கமும் அரசியல் முன்னோடியுமான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ ின் ஒத்துழைப்புடன் அரசுப் பேரவை ஆட்சியின் கீழ் நிர்வகிக்கப்பட்ட தோட்ட நிர்வாகங்களின் திறனற்ற நிர்வாகம் காரணமாக தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதாகவும் அதனால் 1992 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி தோட்டங்களை தனியார் மயப்படுத்தியது. 1992 ஆம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கையின் படி அரசாங்கத்தின் தனியார் மயப்படுத்தல் திட்டத்தின் கீழ் பெருந்தோட்ட அபிவிருத்தி சங்கத்தினாலும் மற்றும் அரச பெருந்தோட்ட தினைக்களத்தினாலும் நிர்வகிக்கப்பட்ட 449 தோட்டங்கள் தனியாருக்கு வழங்கப்பட்டன. அவற்றில் 131 றப்பர் தோட்டங்கள் அரசின் கீழ் இருந்தவையே.

தனியார் மயப்படுத்தலின் போது அதிகரிக்கின்ற வாழ்க்கைச் செலவிற் கேற்ப நாளொன்றுக்கு 20 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டுமென நிறுவனங்களுக்கு நிபந்தனை விதிக்கப்பட்டது. ஆனால் அந்நிபந்தனைகளை பின்பற்றுவதில் தோட்ட நிறுவனங்கள் அக்கறை கொண்டிருக்கவில்லை. அதேபோல் அதுவரை காலம் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மானியங்களை ரத்துச்செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சியை தொடர்ந்து தொழிலாளர்களுக்கிடையில் ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பித்தன.

1994 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தனியார் மயமாக்கல் திட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்தியதுடன் தோட்டத் தொழிலாளர்களுக்கும் முதலாளிமார்களுக்கிடையில் நிலவுகின்ற பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு முத்தரப்பு உடன்படிக்கையொன்றை அறிமுகம் செய்தனர். இரு வருடங்களுக்கு ஒருமுறை தொழிலாளர்கள் சார்பில் தொழிற்சங்க பிரதிநிதிகள், தோட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்தின் சார்பில் தொழில் ஆணையாளரும் இணைந்து உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதுடன் அங்கு தொழிலாளர்களின் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் தொடர்பாக இரு தரப்பும் இணைந்து கலந்துரையாடி உடன்பாட்டுக்கு வந்தனர். அதனூடாக ஓரளவு நிவாரணத்தை பெற்றுக்கொண்டாலும் தற்போது வரையில் தோட்டத் தொழிலாளர்களை பாரிய நெருக்கடிக்குள்ளாக்கிய அக்கூட்டு உடன்படிக்கை வீழ்ச்சி கண்டுள்ளது.

தற்போது அரசாங்கத்தினாலும் கட்டுப்படுத்த முடியாத தோட்டங்கள் தன்னிச்சையாக செயற்படுகின்றன. றப்பர் தோட்ட தொழிலாளர்களின் நாளைய எதிர்காலம் தொழிலாளர்களின் நாட் சம்பளத்தை ரூபா 1700 ஆக அதிகரிப்பதற்கு அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட முடிவினை தோட்ட நிர்வாகங்களினால் நிராகரிக்கப்பட்டமையினால் பாரிய நெருக்கடி உருவாகியுள்ளது. றப்பர் உற்பத்தியின் உற்பத்தி செலவு அதிகரித்துள்ளமையினால் அத்தொகை சம்பள அதிகரிப்பினை வழங்க முடியாதென நிறுவனங்கள் தெரிவித்திருந்தாலும் நிதி மற்றும் பெருந்தோட்ட நிறுவனங்கள் அமைச்சு கடந்த சில வருடங்களில் றப்பர் உற்பத்தி அதிகரித்துள்ளதாக தெரிவிக்கின்றது.

2021 ஆண்டுக்கு சமாந்தரமாக றப்பர் உற்பத்திக்கு ஈடான ஏனைய பொருட்களின் ஏற்றுமதி வருமானம் 2022 ஆம் ஆண்டில் 39 சதவிகிதத்தால் அதிகரித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். 2021ஆம் ஆண்டில் 1050 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்டித்தந்த றப்பர் உற்பத்திகள் 2022 ஆம் ஆண்டு 1463 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. எதிர்வரும் வருடங்களை இலக்காகக்கொண்டு றப்பர் தொழிற்துறையை கருத்திற்கொண்டு வெளியிடப்பட்ட பாரிய (ஆயளவநச ீடயவெ 2017-2026) திட்டத்திற்கமைவாக 2026 ஆம் ஆண்டு மூன்று பில்லியன் அமெரிக்க டொலர் வருமாணத்தை றப்பர் உற்பத்தியின் மூலம் பெற்றுக்கொள்வதே நோக்கமென்கிறார் பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரன. எவ்வாறிருப்பினும் அதிகரித்துச் செல்கின்ற வாழ்க்கைச் செலவு ஏற்ப தொழிலாளர்கள் எதிர்ப்பார்க்கின்ற சம்பள உயர்வுக்கு நீதியை பெற்றுக்கொடுக்காமல் இவ் இலக்கை எட்ட முடியுமா என்பது சவாலுக்குரிய விடயமாகும்.

'இன்று தோட்டத்தில் எடை குறைந்த குழந்தைகள் பிறக்கின்றனர். காரணம் போசனைமிக்க உணவை பெற்றுக் கொடுப்பதற்கு தோட்டத் தொழிலாளர்களின் பெற்றோர்களுக்கு போதிய வருமாணம் இல்லை என சம்பள அதிகரிப்பினை போன்று குறைந்த விலையில் அத்தியவசிய பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு கூட்டுறவுச் சங்க முறைமையினை மீண்டும் தோட்டங்கள் செயல்படுத்த வேண்டுமென மாவத்தகமை மொறத்தன்னை தோட்டத்தின் தொழிற்சங்க செயற்பாட்டாளர் எ.தேவராஜ் தெரிவிக்கின்றார்.

குறைந்தளவு சம்பளம், மானியங்களை ரத்துச்செய்தல் தொழில் பற்றிய நம்பிக் கையின்மை போன்ற பல காரணிகளை மையமாகக் கொண்டு இன்று பல தொழி லாளர்கள் தோட்டங்களிருந்து வெளி யேருவதற்கு தயாராகிக் கொண்டி



ருக்கின்றனர்.

'பெண்கள் மட்டுமின்றி ஆண்களும் இன்று மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை தேடிச் செல்ல ஆரம்பித்துள்ளனர். எப்படியாவது இளைஞர்கள் தோட்டங்களுக்கு வெளியே ஏதாவதொரு தொழிலை தேடிக் கொள்வதற்கு முயற்சிக்கின்றனர். பெரும்பாலும் கடைகளில், சுப்பர் மார்கட்களில் பல சந்தர்ப்பங்களில் வீடுகளில் மற்றும் ஆடைத்தொழிற்சாலைகளில் தோட்டங்கிளிலிருந்து சென்ற யுவதிகளே பணிபுரிகின்றார்களென மொறத்தன்னை தோட்டத்தில் பால் வெட்டும் தொழிலாளி வேலு ஜீவரத்தினம் தெரிவிக்கின்றார். தனது மனைவியும் பணிப்பெண்ணாக மத்திய கிழக்கு நாடொன்றுக்கு தொழிலுக்கு சென்றுள்ளதுடன் ஜீவரத்தினம் தனது குழந்தைகளை பராமரித்துக் கொண்டு தோட்டத்தில் பணிபுரிந்து வருகின்றார்."

ஈரவலய பிரதேசத்தில் அதிகமான றப்பர் தோட்டங்கள் வேறு திட்டங்களுக்காக பயன்படுத்திக் கொள்தற்காக அழித்தல், நிறுவனங்கள் றப்பர் மரங்களில் லாபத்தினை பெற்றுக்கொள்ளாது புதிய றப்பர் பயிர்ச்செய்கையின் மீது ஆர்வம் கொள்ளாத காரணத்தால் நிறுவனங்கள் றப்பர் மரங்களை பிடுங்கி அவற்றில் கட்டுபொல், டிராகன் பழம், வெனிலா போன்ற வேறு பொருளாதார பயிர்சசெய்கைகளுக்கு மாறிய காரணத்தினால் றப்பர் பயிர்ச்செய்கைக்கான பூமி பிரதேசம் சுருங்க ஆரம்பித்துள்ளமை பாரிய பிரச்சினையாகும்.

றப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கைக்கேற்ப 2014 ஆம் ஆண்டளவில் பாரியளவில் றப்பர் உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களாக கருதப்படுகின்ற கேகாலை ஹெக்டயர் 34,453ஆகவும், களுத்துறை ஹெக்டயர் 24,195ஆகவும், இரத்தினபுரி 22,065 ஹெக்டயர் நிலப்பரப்புகளில் றப்பர் பயிர்ச்செய்யப்பட்டாலும் அதனை கடந்த வருடத்துடன் ஒப்பிடுமிடத்து கேகாலை ஹெக்டயர் 15,466 ஆகவும், இரத்தினபுரி ஹெக்டயார் 12,316ஆகவும் களுத்துறை ஹெக்டயர் 8,449 ஆகவும் விழ்ச்சி கண்டுள்ளது.

1989 ஆம் ஆண்டு ஜனாதிபதி பிரேமதாச ரணசிங்க ஆட்சியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட கம்உதாவ திட்டம் புத்தள பிரதேசத்தின் றப்பர் தோட்டங்களை அழித்தே செயல்படுத்தப்பட்டது. அதேபோல் ஹொரனை பிரதேசத்தில் பாரிய றப்பர் தோட்டங்கள் தொழிற்பேட்டைக்காக பலி கொடுக்கப்பட்டுள்ளதுடன் கைவிடப்பட்டுள்ள தோட்டங்களை தோட்ட தொழிலாளர்களுக்கு பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கும் வளர்ப்பு பிரானிகளை மேய்ப்பதற்கும் இத்தோட்டங்களை பெற்றுக் கொடுக்குமாறு பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

வறுமையின் அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கின்ற இவர்கள் நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்குகின்ற றப்பர் தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவுக்கேற்ற ஊதியம், காணி மற்றும் வீட்டுரிமை, கல்வி, சுகாதாரம் நீர் மற்றும் போக்குவரத்து போன்ற அடிப்படை வசதிகளைப் போன்று இவர்களை மரியாதைக்குரிய பிரஜைகளாக கருதுவது, சகோதரத்துவம் மற்றும் ஒத்துழைப்பினூடாக அவர்களது வாழ்க்கையை குறிப்பிடத்தக்க நிலைக்கு உயர்த்தும்.

தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டிக்கொண்டு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்களை ரத்துச்செய்துக் கொண்டு தொடர்ந்து பயனிப்பதாயின் றப்பர் தொழிற்துறை எதிர்ப்பார்கின்ற இலக்கை மற்றும் வெற்றியை நோக்கி நகர முடியாது. அவ்வாறாயின் அவ் அழுத்தங்களுக்கெதிராக தொழிலாளர்கள் மத்தியில் போராட்டங்கள் எழுச்சி கொள்ளும்.

# மருதம் பசுமை நகர்

## Marutham Green City

**வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்**




A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி

B – 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)

C – 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்

நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km

## உள்ளக வசதிகள்

- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

**0777 43 55 57**

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.09.2024இல் வெளியிடப்பெற்றது.